# பெருமைக்குரிய
# பெண் திலகங்கள்



படைப்புச் செம்மல்
பாபநாசம் குறள்பித்தன்

AMMA SYSTEMS

# பெருமைக்குரிய பெண் திலகங்கள்!

படைப்புச் செம்மல்:

**பாபநாசம் குறள்பித்தன்**

வெளியீடு

**விவேகானந்தர் சமூகத் தொண்டு நிறுவனம்**

*வட்டாட்சியர் அலுவலகச் சாலை*

*பாபநாசம் 614 205. தஞ்சை மாவட்டம்*

*போன்: 04374-222985, செல்: 94437 88766*

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | **பெருமைக்குரிய பெண் திலகங்கள்** |
| நூலாசிரியர் | : | படைப்புச் செம்மல்: **பாபநாசம் குறள்பித்தன்** |
| நூலுரிமை | : | ஆசிரியருக்கே |
| முதல் பதிப்பு | : | ஜனவரி - 2009 (08.3.09 உலக மகளிர் தினத்தன்று வெளியிடப்பட்டது) |
| விலை | : | ரூ.30.00 |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 80 பக்கங்கள் |
| எழுத்து | : | 12 புள்ளிகள் |
| அச்சிட்டோர் | : | லலித் வெப் ஆப்செட் |
| வெளியீடு | : | **விவேகானந்தர் சமூகத் தொண்டு நிறுவனம்** வட்டாட்சியர் அலுவலகச் சாலை, பாபநாசம் - 614 205. தஞ்சை மாவட்டம் |

# வெளிப்படையாய் ஒரு புதையல்

**மரு.எஸ்.வேணி**

*பி.எஸ். எம்.ஸ். எம்.டி.(சி)*

*750, பெரியார் நெடுஞ்சாலை, என்.எஸ்.கே.நகர்,*

*அரும்பாக்கம், சென்னை-106*

**த**மிழ் மொழி ஈன்ற குழந்தை இலக்கிய படைப்பாளர்கள் வெகு சிலரில் குறிப்பிடத்தக்கவர் திரு.பாபநாசம்குறள்பித்தன் அவர்கள்,

'தாய்' தமிழ் வார இதழில் தொடங்கிய இவரது எழுத்துப் பணி... தனி இதழ்கள், நூலகங்களுக்கான நூல்கள் எழுதுதல் எனத் தொடர்கிறது. உடல் வளர்ப்பதும், உயிர் வளர்ப்பதும், பலரது குறிக்கோள். ஆனால், உடல் வருத்தி நூல் வளர்ப்பவர் இவர் மட்டுமே.

மறைமுகம் இல்லாத அன்புடைய இவரின் துறைமுகம் வந்த தோணிகள் ஏராளம். சரக்குகளை எல்லாம் ஏற்றிவிட்டு, சன்மானம் வாங்காதவர் என்பதால், இவரையும் வள்ளல் என்று வாழ்ததலாம்.

குழந்தைகள் இலக்கியம் செம்மையானால் எதிர்கால சமுதாயம் சிறப்படையும், பின்பொரு காலத்தில் எழுத்தாளர்களின் புத்தகங்களை நாட்டுடைமையாக்கி நலம் விளைவிக்கும் அரசு... வாழும் காலத்திலேயே வகை, தொகை செய்தால், புதுமை எழுத்துக்கள் பிறக்கும், சிறுவர் இலக்கியம் சிறக்கும் என்பது என் கருத்து.

**"பெருமைக்குரிய பெண் திலகங்கள்"** என்ற இந்நூல், பல அரிய தொகுப்பு நூல்களுள் குறிப்பிடத் தக்கதாய் விளங்கும். நூறு நூல்களைத் தாண்டி எழுதிக் கொண்டிருக்கும் திரு.பாபநாசம்குறள்பித்தன் அவர்களின் பணி சிறக்க மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவிப்பதில் பெருமையடைகிறேன்.

# நட்புரை



எழுத்தாளர்
உமா சுப்பிரமணியன்

மதுரை என்றால் மல்லிகைப்பூ, திருப்பதியென்றால் லட்டு, என்பது போல, பயனுள்ள நூல்கள் இயற்று பவர் என்றால் படைப்புச் செம்மல் பாபநாசம் குறள்பித்தன் அவர்கள்தான்!

பாரதியார் ஆசிரியராக இருந்த சுதேசமித்ரனில் எழுதத் தொடங்கி... புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்திய 'தாய்' வார இதழில் துணையா சிரியராக பணியாற்றி, இன்றுவரை புல பத்திரிக் கைகளில் சிறுவர், ஆன்மிகம், நாடகம், கவிதை, சிறு கதைகள், நாவல்கள் என பல்துறையில் பன்முக ஆற்றல் கொண்டவர், குறள்பித்தன். வீரிய விதைகள் போன்ற இவரது படைப்பு வரிசையில் **'பெருமைக் குரிய பெண்திலகங்கள்'** என்ற நூல் உலகின் பல துறையைச் சார்ந்த பெண்களைப் பற்றிய செய்திகளை, சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு ஊக்கமளிக்கக் கூடிய உத்வேகத்துடன் குறள்பித்தன் அவர்களால் உருவாக் கப்பட்டுள்ளது.

இந்த நூல், நூற்றுக்கு மேற்பட்ட சாதனைப்

பெண்களைப் பற்றிய தகவல் களஞ்சியமாக உள்ளது மாணவ, மாணவியர்கள் மட்டுமின்றி எல்லா தரப்பு மக்களுக்கும் இந்த நூல் மிகப் பயனுடையதாக படைக்கப்பட்டுள்ளது. ஆய்வு செய்பவர்களுக்கும், அறிந்து கொள்பவர்களுக்கும், இந்த வரிசையில் தானும் உயர வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ள வர்களும் விரும்பிப் படிக்கும் நூலாக அமைந்துள்ளது.

கல்வியாளர், விளையாட்டு வீராங்கனைகள், விடுதலைப் போராட்டத்தில் பெண் போராளிகள், காவல்துறை, மருத்துவத்துறை, இசை, நடனம், நடிப்பு, என பல்துறை சார்ந்த, சாதித்த பெண்களை பெருமைப்படுத்துகிற நூல். குறள்பித்தன் அவர்களால் படைக்கப்படுகிறபோது மேலும் சிறப்புப் பெறுகிறது.

உழைக்கும் மகளிரால் உருவாக்கப்பட்டு மகளிர் தினத்தன்று வெளியிடுவதற்கான மிகப் பொருத்த மான நூல்.

இந்நூலுக்கு நட்புரை எழுதுவதில் நானும் சாதித்தது போன்ற மகிழ்ச்சி. மேலும், இது போன்ற பயனுள்ள நூல்களை தொடர்ந்து படைத்திட... எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை வேண்டுகிறேன்.

*முகவரி : -*
*2/8. இராகவா நகர்,*
*10-வது தெரு,*
*மூவரசன்பட்டு,*
*மடிப்பாக்கம்,*
*சென்னை - 600 091.*
*செல் : 94447 85607.*

# காணிக்கை

என்னை
ஈன்றெடுத்த
முதல் தெய்வமான
தாய் தனம் வெங்கிடாசலம்
அவர்களின்
மலர் பாதங்களுக்கு...

- தனத்து மகன்

# பெண் அரிய புதையல்...!

**- பாபநாசம் குறள்பித்தன்**

இனிய, உலக மகளிர் அனைவருக்கும், இந்நாளில் என் வணக்கம்.

கண்ணுக்குப் புலனாகாத அமைதி, பெண் வடிவாகி கண்ணுக்குக் காட்சியளிக்கிறது, என்று சங்க கால நயவுரை நாயகர் நச்சினார்கினியவர், பெண்மை பற்றி பெருமை பேசுகிறார்.

'மங்கையில்லா மனை பாழ்' - என்று நரைமுடி நாயகி ஔவையார் மங்கையரின் சிறப்பைப் பேசுகிறார்.

மங்கையில்லாத மனையே பாழ் என்றால், நாடு என்னவாகும்? நினைத்துப் பார்க்க முடியவில்லை.

'மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா...'

என்று பெண்மையின் மேன்மையை கன்னித் தமிழால் கவிதையாக்கிப் பேசுகிறார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

இப்படி, சான்றோர்களால் போற்றப்படும் பெண்கள், இன்று...

மண்ணாய்வில் இருந்து விண்ணாய்வு வரையிலும், அகப்பை பிடித்த கைகளால், இன்று ஆகாயக் கப்பல் வரை இயக்குகின்ற நிலையில் உயர்ந்திருக் கிறார்கள்.

இதை எண்ணும்போது இதயம் முழுதும் மகிழ்ச்சி மலராய் மணம் வீசுகின்றன.

இயற்கையில் படைக்கப்பட்ட ஜீவராசிகளுள் மிகவும் உத்தமமானவள் பெண்ணே! பாதுகாக்கப்பட வேண்டிய அரிய புதையலும் அவளே!

பெண்களின் உயர்விற்கும், உழைப்பிற்கும் மதிப்பளிப்போம்; மனநிறைவாய் அவர்களை வாழ்த்துவோம்!

இந்த நல்ல வாய்ப்பினை வழங்கிய விவேகானந்தர் சமூகத் தொண்டு நிறுவனர் திருமிகு தங்க.கண்ணதாசன் அவர்களுக்கும், நட்புரை வழங்கியுள்ள டாக்டர் எஸ்.வேணி அவர்களுக்கும் எழுத்தாளர் திரு.உமாசுப்பிரமணியன் அவர்களுக்கும் நன்றி.

எப்போதும் போல் என் எழுத்திற்கும் இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த் துணைவியார் நீலாகண்ணன் அவர்களுக்கு என் வணக்கமும், வாழ்த்தும்.

-நட்புடன்

**குறள்பித்தன்**

13/1, 2வது குறுக்குச் சந்து,
வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை-24.
அலைபேசி : 99415 15237,
94444 54335.

**தங்க.கண்ணதாசன், எம்.ஏ.,**
வட்டாட்சியர் அலுவலகச் சாலை
பாபநாசம் - 614 205.
தஞ்சை மாவட்டம்



# பதிப்புரை

இந்திய மண்ணில் இதுகாரும் எத்தனையோ பெண்மணிகள் இலக்கியம், ஆன்மீகம், அரசியல், அறிவியல், விளையாட்டு துறைகளில் பல்வேறு சாதனைகளை சாதித்துள்ளது. அதுபோல், எளிய மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்து இன்ப, துன்பங்களிலும் பங்கேற்பது மட்டுமல்லாது, சமூக, பொருளாதார மாற்றத்திற்கு வழிகாட்டியாய் விளங்கி வரும் சமூக - சாதனை பெண்மணிகளின் பெருமை... கிராமத்துப் பெண்களும் அறியும் வண்ணம் நூல் ஒன்றினை வெளியிட வேண்டும் என்ற என் விருப்பத்தினை எனது நெடுநாள் நண்பர் கவிஞர் பாபநாசம் குறள்பித்தனிடம் பேச்சு வாக்கில் தெரிவித்தேன்.

அந்த என் எண்ணத்தை மெய்ப்பிக்கும் வண்ணம் மதுரை சின்னப்பிள்ளை முதல் ஜெர்மன் நாட்டு பைலட் வரை - உலக அளவில் நிகழ்த்திய சாதனையாளர்களை அழகுற வடித்துள்ளார்.

நூல் எழுதிய கவிஞர் அவர்களுக்கும் அழகிய வடிவிலே அச்சேற்றிய அச்சகத்தாருக்கும், முகப் போவியத்திற்கு எழிலூட்டிய பாலாஜி அமுதோன் அவர்களுக்கும், மேலும் இந்நூலாக்கத்தில் துணை நின்ற அனைத்து நண்பர்களுக்கும், விவேகானந்தர் சமூகத் தொண்டு நிறுவனத்தின் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் உங்கள் அன்புடன்
**தங்க.கண்ணதாசன்**
செயலாளர்

# உலக மகளிர் தினம் எப்படி தோன்றியது...!

**பெ**ண் சுதந்திரம், பெண் சமத்துவம், பெண் முன்னேற்றத்திற்கு குரல் கொடுக்கிற நாளாக இந்நாள் ‘உலக மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்த மகளிர் தினம் எப்படி, எதனால் முதன் முதலில் வந்தது என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் 1908-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் நாள் வேலை நேரத்தை குறைத்தல், வேலைக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குதல் ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து, பஞ்சாலைப் பெண் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினார்கள்.

இட்லாரா சிட்சின் என்ற பெண்கள் தலைவி, இந்நாளை மகளிர் தினமாக கடைபிடிக்க குரல் கொடுத்தார்.

1910-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் நாள் இதற்கான அறிவிப்பு வெளியானது. அதைத் தொடர்ந்து முதன் முதலாக அதிகாரப்பூர்வமாக 1911 மார்ச் 8-இல் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

தற்போது 1976-ஆம் ஆண்டு முதல் மார்ச் 8-இல் மகளிர் தினம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

# இதோ ஒரு பெரிய பிள்ளை !

இந்த சாதனைப் பெண் மதுரையைச் சேர்ந்த அழகாபுரிக்கு அருகிலுள்ள புல்லுச்சேரி என்கிற குக்கிராமத்தில் பிறந்தார். இக்கிராமத்தில் 250 குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றன. ஒரு ஆள் மட்டுமே இருக்கக் கூடிய நாற்பது சதுர அடி கொண்ட பனை ஓலை வேய்ந்த குடிசையே இவரது மாளிகை!

பதினொரு வயதில் தன் தாய் வழி மாமாவை மணம் முடித்த இவர்,தன் கிராமங்களிலுள்ள பெண்களைத் திரட்டி, நாற்று நடுதல், களை எடுத்தல் போன்ற பணிகளில் ஈடுபட வைத்து, அவ்வூர்பண்ணையாளர்களிடம் பணம் பெற்று, உழைத்தவர்களுக்கு பணத்தைப் பங்கிட்டுக் கொடுத்து வரும் வேலையை செய்து வந்தார்.

இப்படி படிப்படியாய் உழைத்துதான் 40, 50 பெண்களுக்கு தலைமையேற்றார்.

இந்த நிலையில், அக்கிராமத்திற்கு வந்த அதிகாரிகள்... லோனில் வீடு வாங்கித் தருகிறேன், மாடு வாங்கித் தருகிறேன் என்று சொல்லி, கிராம மக்களிடம் காய்கறிகளையும், கோழிகளையும் வாங்கிப் போனதோடு சரி. மக்களுக்கு லோன் கிடைத்தபாடில்லை.

இந்த நிலைமையைக் கண்டு மனம் நொந்து போன அவர், இந்த அதிகாரிகள் செய்கிறேன் என்று சொல்லி வருவதை... நாமே முன் நின்று செய்தால் என்ன? என்று சிந்தித்தது அவரது இதயம்.

ஏட்டறிவு கொஞ்சமும் இல்லாத அந்த ஏழைப் பெண் - சின்னப்பிள்ளை துணிவோடு அரசு அலுவலகங்களை நோக்கிப் பயணமானார். அத்தோடு, வறுமைக்கோட்டில் வாழும் பெண்கள் தினமும் கையில் கிடைககும் ரூபாய்களை சேமிக்க வழி செய்தார். சேமித்த பணத்தை அப்பெண் களுக்கே கடனாகக் கொடுத்து வந்தார்.

சில ஆண்டுகளுக்கு முன் சுய உதவிக் குழுவாக அவரால் தொடங்கப்பட்ட களஞ் சியம் என்ற அமைப்பில், எவ்வளவு பணம் போட்டாலும் திரும்ப கிடைக்கும் என்று

பெண்கள் மத்தியில் நம்பிக்கை நாற்று துளிர் விடத் தொடங்கியது.

மாடு வாங்கவும், ஆடு வாங்கவும், நிலம் வாங்கவும் அப்பணம் மக்களுக்கு உதவின.

இப்படி, மக்களுக்காகவே சேவை செய்யத் தொடங்கிய சின்னப்பிள்ளையின் களஞ்சியத்தில் இன்று 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள். சின்னப்பிள்ளையின் உழைப்பால் இன்று இவர் வட்டாரத்தில் மீன் பண்ணை, பால் பண்ணை, அங்காடிகள் என்று வியாபார நிறுவனங்கள் அனைத்துமே உழைக்கும் பெண்களுக்குச் சொந்தமானது.

தாழ்த்தப்பட்ட இனத்திலே தோன்றிய சின்னப்பிள்ளையின் - படிப்பறிவே இல்லாத சின்னப்பிள்ளையின் 35 ஆண்டு கால தொண்டினைப் பாராட்டி, 'ஸ்திரி சக்தி புரஸ்துார் ராதா ஜீஜாபாய்' விருது வழங்கப்பட்டது. கூடவே ஊக்கத் தொகையாக ஒரு இலட்சம் பணமும் கொடுக்கப்பட்டது. இவ்விருதை சின்னப்பிள்ளைக்கு தந்தவர், முன்னாள் பிரதமர் வாஜ்பாய். இந்த விழாவில்தான் ஒரு அதிசயம் நிகழ்ந்தது... ஆமாம், சின்னப்பிள்ளை பிரதமரின் காலைத் தொட்டு வணங்கினார். பிரதமரும் சின்னப்பிள்ளையின் காலைத் தொட்டு வணங்கி 'நலமாக இருக்க

வேண்டும்' என்று வாழ்த்தவும் செய்தார்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்து - தாழ்த்தப்பட்ட இனத்திலே தோன்றி, இன்று பல ஆயிரம் குடும்பங்களுக்கு ஆலமரமாய் இருந்து நிழல் தந்து கொண்டிருக்கிறார்.

எங்கே பிறந்தோம் என்பது முக்கியமல்ல, மனித நேயத்தோடு மக்களுக்காக - நாட்டுக்காக வாழ்வதே உயர்ந்த வாழ்க்கை. வாழ்க சின்னப் பிள்ளை - இல்லை பெரிய பிள்ளை!

✦ ✦ ✦ ✦

தாதாசாகிப் பால்கே விருது பெற்ற முதல் இந்தியப் பெண்மணி, தேவிகா ராணி குரோசிக்

✦ ✦ ✦ ✦

இந்தியாவின் முதல் தலித் பெண் முதலமைச் சர் மாயாவதி.

✦ ✦ ✦ ✦

முதன் முதலில் பத்மஸ்ரீ விருது பெற்ற முதல் நடிகை நர்கீஸ்தத்.

✦ ✦ ✦ ✦

இந்திய மகளிர் தேசிய அமைப்பின் முதல் மகளிர் தலைவி, ஜெயந்தி பட்னாயக்.

✦ ✦ ✦ ✦

# ஆலிலை பத்து காசு...!

மழை வளம் பெருக வேண்டுமானால், நாட்டில் மரங்களை பெருக்க வேண்டும்; பாதுகாக்க வேண்டும்.

நம் முன்னோர்கள் இந்த பேருண்மையை அறிந்த தால்தான் - அக்காலத்தில் மரங்களை தெய்வமாக போற்றி வளர்த்தார்கள். வணங்கினார்கள்.

அப்படி ஒரு மங்கையர் திலகம் இங்கே செய்வதைப் பாருங்கள்.

தமிழ்நாட்டில்தான் சிந்தாமணி என்கிற கிராமம் இருக்கிறது.

இந்த கிராமத்தில்தான் நாகம்மையார் என்பவரும் இருக்கிறார். இவருக்குச் சொந்தமான ஆலமரம் ஒன்று இருக்கிறது.

இந்த மரத்தின் நிழலில் யார் வேண்டுமானலும் உட்காரலாம். ஆடு, புலி ஆட்டம் கூட ஆடலாம். கண்டு கொள்ள மாட்டார். ஆனால், தப்பித் தவறி

மரத்திலிருந்து ஒரு இலையை பறித்துவிடக் கூடாது. அப்படி பறித்து விட்டால், ஒரு இலைக்கு பத்து காசு வீதம் தண்டம் விதித்து வசூலித்து விடுகிறார் நாகம்மையார்.

இப்படி மக்கள் யாவரும் இவரைப் போல் மரத்தை நேசித்தால் - பாதுகாத்தால் இந்த நாடு செம்மைப் படும் என்று எண்ணத் தோன்றுகிறது.

✦ ✦ ✦ ✦

**2007** ஆண்டு நடந்த 13-ஆவது ஜனாதிபதி தேர்தலில் முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் ஜனாதிபதி, பிரதிபா பாட்டீல்

✦ ✦ ✦ ✦

**ஐ.**சி.சி.யின் சிறந்த கிரிக்கெட் வீராங்கனை விருது பெற்ற முதல் இந்தியப் பெண், ஜூலான் கோஸ்சுவாமி.

✦ ✦ ✦ ✦

**1991**ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் பெண்கள் கிளப், மும்பையில் உள்ள சைனா கார்டனில் உருவாக்கப்பட்டது. 'நெல்சன் வாங்' என்ற பெயருடைய இந்த கிளப் ரோட்டரிச் சங்கம் மாதிரியே உறுப்பினர்களை சங்கமே தேர்ந்தெடுத்து சேர்த்துக் கொள்ளும். மனுச் செய்து சேர்ந்து கொள்ள முடியாது. ஆண்டு சந்தா ரூ.10,000.

✦ ✦ ✦ ✦

**ப**ச்சேந்திரபால், எவரெஸ்ட் மீது ஏறிய முதல் இந்தியப் பெண். இரண்டாவது முறையாக முற்றிலும் பெண்கள் மட்டுமே பங்கு பெற்ற குழுவிற்குத் தலைமையேற்று 'பால்' சென்றார்.

✦ ✦ ✦ ✦

டில்லியில் இருந்து ஆட்சி புரிந்த முதல் பெண்மணி இந்திராகாந்தி அல்ல. அதற்கு முன் ஆட்சி செய்தவர், ரஷியா சுல்தானா என்ற பெண் தான்.

✦ ✦ ✦ ✦

நடிகை ரேவதி தன் இரண்டு கண்களையும் தானம் செய்வதாக உறுதி மொழிப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துள்ளார்.

✦ ✦ ✦ ✦

இன்று ஆண்களுக்கு இணையாக பெண்கள் ஈடுபடாத தொழிலே இல்லை என்று சொல்லலாம்.

ஆமாம், குஜராத் மாநிலத்திலுள்ள பவநகர் என்ற ஊரிலுள்ள தொடர்வண்டி நிலையத்தில் பெண் போர்ட்டர்கள் இருக்கிறார்கள்.

இந்தியாவில் வேறு எந்த தொடர் வண்டி நிலையத்திலும் பெண் போர்ட்டர்கள் இல்லை.

✦ ✦ ✦ ✦

சங்க காலத்தில் தமிழ் நட்டில் தான் பெண் புலவர்கள் அதிகம் இருந்திருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், காக்கைப் பாடினியார், இளவெயினியார், நச்சள்ளையார், ஒளவையார், பூதப்பாண்டியின் பெருந்தேவியார், வெண்ணிக்குயத்தியார் என்று 31 பெண்பாற் புலவர்கள் இருந்திருக்கிறார்கள்.

✦ ✦ ✦ ✦

பெண்ணுரிமைக்காக, அவர்கள் நலத்திற்காகப் பாடும்படும் 'விமோசனா' என்ற பெயரில் பெங்களூர் பெண்கள் சங்கம் இதை நடத்து கின்றது. பெண்கள் முன்னேற்றத்தில் அக் கறையுள்ள பிற சங்கங்களும் இதை ஆதரிக்கின்றன.

✦ ✦ ✦ ✦

இந்திய திருநாட்டில், ஒரு வீரப் பெண் திலகத்திற்கு மிகவும் உயரமான சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. சிலையின் உயரம் ஆறு மீட்டர். சிலை இருப்பது, கான்பூர் ராஜமார்க்கம் அமிப்பா மாவட்டத்தில் தான்.

இதே வீராங்கனைக்கு குவாலியரிலும், மும்பையிலும் சிலைகள் உள்ளன. இந்த இரண்டு சிலைகளும் மூன்று கால்களை ஊன்றி ஒரு காலைத் தூக்கிய நிலையில் இருக்கும் குதிரையில் அமர்ந்துள்ளது போன்ற சிலைகளாகும்.

ஆனால், அமிப்பூர் மாவட்டத்திலுள்ள குதிரைச் சிலை இரு கால்களை ஊன்றி இரு கால்களை உயர்த்தியுள்ளது போன்ற சிலையாகும். எந்த வீராங்கனைக்கு இந்த சிறப்பு தெரியுமா? ஜான்சிராணி லட்சுமிபாய் அவர்களுக்குத்தான்.

✦ ✦ ✦ ✦

ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண்கள் என்பதை உணரச் செய்தவர், சாந்த்பீவி என்ற பெண் வீராங்கனை. இவர்தான் அக்பரை எதிர்த்தார் - போரிட்டார்.

✦ ✦ ✦ ✦

பாகிஸ்தானில், பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் கூடக் கலந்து கொள்ளக் கூடாது என்று சட்டம் இருக்கிறது.

பிறரை அடிமையாக்க நினைக்கும் இவர்கள் சொந்த மக்களுக்கே இந்தக் காலத்தில அடிமை நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்களே, என்று எண்ணத் தோன்றுகிறதா?

✦ ✦ ✦ ✦

ஆச்சி நடிகை மனோரமாவைத் தெரியாதவர் இந்தியாவில் யாரும் இருக்க முடியாது.

அப்படி யாராவது இருந்தால் அவர்கள் கொல்லிமலைக் காட்டிலோ மற்ற காட்டிலோ

இருப்பவர்களாகத்தான் இருப்பார்கள்.

காரணம், நடிகை மனோரமா இதுவரை 5,000 முறைகளுக்கு மேலாக மேடை நாடகங்களிலும், 1000க்கு மேற்பட்ட திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார்.

இத்தகு சாதனைக்காக இவர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறார் என்பதிலிருந்தே இவரின் ஆற்றலை, புகழை நாம் அறிந்து கொள்ளலாம்.

✦ ✦ ✦ ✦

விதவைப் பெண்கள் அதிகம் உள்ள நாடுகள் இந்தியாவும், ஜப்பானும்தான்.

✦ ✦ ✦ ✦

இந்தியாவில், பெண்களால் மட்டுமே நடத்தப்படும் கூட்டுறவு வங்கிகள் முப்பதுக்கு மேல் இயங்கி வருகின்றன.

✦ ✦ ✦ ✦

நாட்டுக்கு நாடு சேலைகளும், செயல்களும், மரபுகளும் மாறுபடுகின்றன.

ராஜஸ்தானில் விதவைகள் கறுப்பு சேலைகள் கட்டுகிறார்கள்.

சுமங்கலிப் பெண்கள் வெள்ளைச் சேலைகள் கட்டுகிறார்கள்.

கணவனோடு கறுப்புச் சேலை கட்டிக் கொண்டு தமிழ் பெண்கள் போகும்போது வியப்போடு பார்க்கிறார்கள்.

✦ ✦ ✦ ✦

மும்பையில் தற்போது முழுக்க, முழுக்க பெண்களே ஒன்றிணைந்து நடத்தும் ஒரு நாடகக்குழு உள்ளது. இக்குழுவின் பெயர் 'மகாலட்சுமி லேடிஸ் டிராமா' என்பது. இது 1989ல் தொடங்கப்பட்டது. திருமதி ஞானம்தான். 16 தோழிகளுடன் செயல்பட்டு வருகிறார். இதிலுள்ள அனைவரும் பணி செய்யும் பெண்கள். அரசு அதிகாரிகளின் துணைவியர்கள்.

இவர்கள், பெண்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து இந்தியா முழுதும் நாடகங் களை நடத்தி வருகிறார்கள்.

✦ ✦ ✦ ✦

கற்புடைய பெண் வாழ்க்கையின் விளக்காகவும், வழிகாட்டியாகவும் விளங்குகிறாள்.

– ஷேக்ஸ்பியர்

✦ ✦ ✦ ✦

பொற்புடைய மகளிரோடு பொருந்தியே வாழ்தல் இம்மையில் சொர்க்கம்

– விவேகசிந்தாமணி

✦ ✦ ✦ ✦

# கொடி தந்த கோதை!

காமா அம்மையார் மும்பை பெருவணிகர் வழியில் வந்த பார்ஸி இனத்திலே தோன்றியவர். இவருடைய தந்தை சோராஜி பிரேம்ஜி பட்டேல் தன் பெண்ணுக்குத் திருமணம் செய்து பார்க்க விரும்பினார்.

ஆனால், காமா அம்மையார் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து வெள்ளையரை எதிர்க்க ஆரம்பித்தார். பாரதம் விடுதலை பெற ஒரே வழி ஆயுதப் புரட்சி என்றார். 1908-ஆம் ஆண்டு உலகே வியக்கும்படி இந்திய கொடியை பெர்லினுக்குச் சென்று ஸ்டட்கார்டின் பொதுக் கூட்டத்தின் தொடக்கத்தில் ஏற்றியவர் இவரே. இந்த மூவண்ணக் கொடிதான் இன்றைய தேசிய கொடிக்கு மூலமாகும்.

காமா அம்மையார் ஏற்றிய மூவண்ணக் கொடியில் மேலே ஆரஞ்சு நிறத்தில் எட்டு நட்சத்திரங்கள் இருந்தன. மையத்திலுள்ள வெள்ளை நிறத்தில் வந்தே மாதரம் என்ற சொற்கள் இந்தியில் எழுதப்பட்டிருந்தன. கீழே பச்சை நிறத்தில் வலது கோடியில் சந்திரனும் இடது கோடியில் சூரியனும் வரையப் பெற்றிருந்தன.

இன்றைய நமது தேசியக் கொடிக்கு வடி

வமைத்த பெருமாட்டியும், முதன் முதலில் கொடி ஏற்றியவரும், பெண்களுக்குப் பெருமைத் தேடித் தந்தவரும், பிக்காஜி ருஸ்தம் காமா என்ற வீரத்திலகம்தான்.

✦ ✦ ✦ ✦

பெண்ணை ஒரு ஜடப் பொருளாக நடத்து வதனாலேயே, எல்லா துன்பங்களும் வருகின்றன.

– பெர்னாட்ஷா

✦ ✦ ✦ ✦

ஒரு நல்ல பெண்மணியின் காலடியில் போலி பழிச் சொற்கள் மடிந்து போகின்றன.

– டக்ளஸ் டூப்ளே

✦ ✦ ✦ ✦

பெண் என்பவள் எந்த இளங்காற்றுக்கும் வளைந்து கொடுக்கும் நாணல். ஆனால் புயல் அடித்தாலும் ஒடிந்து விடுவதில்லை.

– வாட்லி

✦ ✦ ✦ ✦

# பெண்ணின் சிறப்பு

✦ எந்த இடத்தில் பெண்கள் மரியாதையாக நடத்தப்படுகிறார்களோ, அந்த இடத்தில் தேவதைகளே குடி கொள்ளுகிறார்கள்.

- மகாபாரதம்

✦ உலக அன்னையின் தோற்றமாய் விளங்கு கின்ற பெண்களை உயர்வடையச் செய்தாலன்றி நீங்கள் உயர்வதற்கு வேறு வழியிருக்கிறதென்று எண்ணாதீர்கள்.

- விவேகானந்தர்

✦ பெண்ணைத் தாழ்வாகவும், ஆண்களை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கு எல்லாம் அஸ்தி வாரம். அநீதிகளுக்கு எல்லாம் கோட்டை; கலியுகத்திற்குப் பிறப்பிடம்.

- பாரதியார்

✦ எந்நிலையிலும் இல்லறத்தை நடத்திச் செல்லும் திறமையும், எல்லோரும் புகழத் தக்க

கற்பு நிலையுடைய துணைவியே இல்வாழ்க்கைக்கு ஏற்றவள்.

– நாலடியார்

✦ கற்பு நெறி தன்னையும், தன் கணவனையும் காத்து... புகழையும், உறுதியையும் காப்பாற்றி வாழ்கின்றவளே பெண்.

– திருவள்ளுவர்

முதன் முதலாக விமானப் பணிப் பெண் களுக்கான பயிற்சிக் கல்லூரி பெங்களூரில் தொடங்கப்பட்டுள்ளது. பெங்களூரிலுள்ள விமானப் பணிப் பெண்களுக்கான டீன் அகாடமி இதைத் தொடங்கியுள்ளது.

நம் நாட்டில் இத்தகைய தனியார் பயிற்சி நிறுவனம் தொடங்கியது இதுவே முதல் முறை. இப்போது இதில் பல மாணவிகள் விமானப் பெண்களுக்கான பயிற்சியை மேற்கொண்டுள் ளனர்.

✦ ✦ ✦ ✦

பாகிஸ்தானிலுள்ள எழுத்தாளர்களிலேயே இளம் வயது கொண்ட பெண் எழுத்தாளர், நயந்தரா நூரணி என்ற சிறுமியே. வயது 13. இந்த வயதிலேயே புத்தகங்களை எழுதிக் குவித்து வருகிறார்.

இந்த இளசின் முதல் புத்தகம் 'எட்ரீம் கம்ட் ரூ' (ஒரு கனவு நனவாகிறது). நல்ல புகழையும், பாராட்டையும் இவளுக்குத் தேடித் தந்திருக்கிறது இந்நூல். இந்த இளம் தளிர் நான்காம் வகுப்பு படிக்கும்போதே பல்வேறு கட்டுரைகளை எழுதிக் கொண்டு இருப்பாளாம். இந்த ஆர்வமே கதை எழுத துணையாக இருந்திருக்கிறது இவளுக்கு.

பாகிஸ்தானிலுள்ள பல பதிப்பகங்கள் இவளிடம் குழந்தைகளுக்கான கதைகள் கேட்டு குவிகின்றார்களாம்.

✦ ✦ ✦ ✦

தமிழக அரசின் திருவள்ளுவர் விருதைப் பெற்ற முதல் பெண்மணி சிவகாமி சுந்தரி. இவர், சென்னை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொகுப்பியல் துறைத் தலைவராக இருக்கிறார்.

✦ ✦ ✦ ✦

எல்லா நடிகைகளுக்கும் இப்படி ஒரு எண்ணம் வருமா என்பது ஐயம்தான். நடிகை ஷபனா ஆஸ்மி, பரூக்ஷேக் நடிகருடன் சேர்ந்து அமெரிக்கா சென்று, அங்கு பல இடங்களில் 'துமாரி அம்ரிதா' என்ற நாடகத்தை நடத்தினார்.

வழக்கம் போலவே, மத ஒற்றுமை, ஆண், பெண் சமத்வத்தை ஷபனா அங்கேயும் கூறாமல் விடவில்லை.

அங்கு நடத்திய நாடகங்களின் மூலம் கிடைத்த பணத்தில் ஒரு பகுதியை புதுடில்லியிலுள்ள 'காஷ்மீர் அகதி'களுக்கு கொடுத்தார். இப்படிப் பட்ட தொண்டுகள் செய்வதற்காகவே நிவாராஹக் என்ற அமைப்பைத் தோற்றுவித்திருக்கிறார்.

✦ ✦ ✦ ✦

தொழிலில் எந்த வேறுபாடும் இல்லை என்பதற்கு உதாரணம்தான் இவர்.

பெண்கள் முடி வெட்டுகிறார்கள். ஆண் களுக்கும்தான். கத்திரிக்கோல் கொண்டு தான்.

ஆனால் மும்பையில் பாரதி தனுஜா என்ற பெண்மணி கம்யூட்டரின் உதவியுடன் ஹேர் கட்டிங் செய்யும் சலூன் ஒன்றை நடத்தி வருகிறார்.

✦ ✦ ✦ ✦

டாக்டர் ராஜசீலிஜான் எழுபத்தைந்து ஆண்டு களாக ஆண்கள் மட்டுமே அமர்ந்திருந்த சென்னை - நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வி யியல் கல்லூரியின் முதல்வர் பதவியில் முதன் முதலாக அமர்ந்த பெண் இவர்தான்.

✦ ✦ ✦ ✦

இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்று போராடிப் பெற்றவர் ராமாபாய்

ரானடே என்ற பெண்மணி. இவருக்கு குழந்தைகள் இல்லை. கணவரும், மனைவியும் யோசித்து 1887ஆம் ஆண்டு ஒரு பெண் குழந்தையையும், ஒரு ஆண் குழந்தையையும் தத்து எடுத்து வளர்த்தனர்.

இப்போது யார் யாரோ வளர்ப்புப் பிள்ளை, தத்துப்பிள்ளை என்று கூறுகிறார்களே, இந்த செயலை நூறு ஆண்டுகளுக்கு முன்பு ராமாபாய் அம்மையார் செய்து விட்டார்.

இவரைப் போல பணம் படைத்தோர் செயல் பட்டால், இந்தியாவில் அனாதை இல்லங்கள் ஏன் தோன்றப் போகிறது? அதற்கு ஈரமான இதயம் வேண்டுமே!

✦ ✦ ✦ ✦

அழகான பெண்கள் கண்களுக்கு விருந்த ளிக்கிறார்கள். குணமுள்ள பெண்கள் இதயத்திற்கு இதமளிக்கிறார்கள். அழகான பெண்ணை ஆபரணம் என்றும், குணமுள்ள பெண்களை பொக்கிஷம் என்றும் கூறலாம்.

– ஷேக்ஸ்பியர்

# பெண் அமிர்தம்!

✦ எந்தப் பெண்களைப் பற்றி அதிகமாகப் பேச்சில்லையோ அவர்கள் மிகவும் நல்லவர்கள்.

- ஷைலிஷியா

✦ கணவனிடம் எத்தனை கோபமிருந்தாலும் ஒரு பெண் தன் வீட்டு வாயிலைத் தாண்டக் கூடாது.

- காமசூத்திரம்

✦ கற்புடைய பெண் அமிர்தம்.

- சிறுபஞ்சமூலம்

✦ பெண் இனிது; பேணி வழிபடின்.

- நான்மணிக் கடிகை

✦ அபலை என்று சொல்லப்படும் பெண்ணிற்கு ஆணை விட அதிக சக்தி உண்டு. இந்தியக் கிராமங்களுக்கு என்னோடு வருவீர்களானால் இந்த உண்மையை நான் நிரூபித்துக் காட்ட சித்தமாயிருக்கிறேன்.

- காந்தியடிகள்.

✦ மனித வாழ்வில் மாண்புடைய பெண்ணை மனைவியாகப் பெறுவது போல் மகிழ்ச்சி தருவது எது? நட்பும், காதலும், சாந்தியும் சேர்ந்து கொண்டால் அந்த மணம் தெய்வீகமானதே!

- கவிஞர் வில்லியம்

✦ இயற்கையாக அன்பு வளரக் கூடியது தான் பெண் மனம்.

- மு.வரதராசனார்

✦ வாழ்க்கையின் ஆரம்பமும் முடிவும் பெண்களைச் சுற்றியே பிணைக்கப்பட்டிருக்கிறது.

- ஜெகசிற்பியன்

✦ கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம், அந்நிலத்தில் புல் விளைந்திடலாம். புதல்வர்கள் விளைதலில்லை. கல்வியை உடைய மக்கள் திருந்திய கழனி அங்கே நல்லறிவுடைய மக்கள் நவிலவோ நான்.

- பாரதிதாசன்

# நித்தியமல்லி நிவேதிதா!

இந்தியாவின் உயர்விற்காக பாடுபட்டவர்கள் - பணி புரிந்தவர்கள் - புரிந்து கொண்டிருக்கின்ற பெண்மணிகள் பலருண்டு. இதில் ஒருவர்தான், சகோதரி நிவேதிதா.

இவர். சுவாமி விவேகாந்தரின் போதனைகளில் ஈடுபாடு கொண்ட அயர்லாந்து பெண்மணி. இவர் இந்திய மக்களின் ஏழ்மையால் - எளிமையால் ஈர்க்கப்பட்டவர்.

சுவாமி விவேகானந்தரின் அறிவாற்றலை உணர்ந்து குருவாக ஏற்றுக் கொண்டு, இந்தியாவில் தன் பாதத்தைப் பதித்தவர். அப்போது அவருக்கு வயது 31. இந்தியா வந்த ஆண்டு 1898 மார்ச் 25.

இந்திய கல்வி முறையில் ஒரு புதிய அணுகு முறை வேண்டும் என்று சிந்தித்ததோடு அதை செயல்படுத்தவும் வேண்டும் என்று பேசியும், எழுதியும் வந்தார்.

கொல்கத்தாவில் அன்னை சாரதாதேவியின் முன்னிலையில் 1898-ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் தேதி பெண்களுக்கான பள்ளி ஒன்றை நிறுவினார். 1963இல் இருந்து இப்பள்ளி 'இராம கிருஷ்ணா மிஷன்' சகோதரி நிவேதிதா பெண்கள் பள்ளி என்று அழைக்கப்படுகிறது.

இந்தியாவில் இவர் இருந்தது 12 ஆண்டுகள் தான். இதற்கு இடைப்பட்ட நாள்களில் அவர் ஆற்றிய, செய்த சமுகப் பணிகள் வியக்கத்தக்கவை.

இந்திய இலக்கியம் - கலை - கலாச்சாரம் - கல்வி முறை என்று இவர் தொடாத நிலைகளே இல்லை எனலாம். நம் நாடு முழுவதும் பயணம் செய்து, இவர் ஆற்றிய அரும் பணிகள். நிகழ்த்திய சொற்பொழிவுகள், எழுதிய எண்ணக் குவியல்கள் இந்திய மக்களிடையே ஒரு புத்துணர்ச்சியையும், புதுத் தெம்பையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியது என்றால் அது மிகையல்ல.

1911இல் டார்ஜிலிங்கில் உயிர் விட்ட சகோதரி நிவேதிதா இந்தியாவை தன் தாயாகவே போற்றினார்.

பிரான்ஸ் நாட்டில் செயின் என்ற ஒரு தீவில்.. முழுக்க முழுக்க பெண்களே உழைத்து, அழகிய மாதா கோயில் ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள்.

✦ ✦ ✦ ✦

உலகிலேயே பெண்களுக்கு கட்டாய இரா ணுவப் பயிற்சி கொடுக்கும் ஒரே நாடு இஸ்ரேல்.

✦ ✦ ✦ ✦

அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரைச் சேர்ந்த டிஃப்லர் என்ற பெண்மணிதான் உலகிலேயே அதிக எடையுள்ளவர். இவரது உடலின் எடை 450 கிலோ. உடல் எடை கூடிவிட்டதே என்று கவலைப்படாது, அமெரிக்காவில் பெரியதொரு துணிக்கடையில் ஓடி, ஆடி வேலையும் செய்து வருகிறார் என்பதே வியப்பான ஒன்றாகும்.

✦ ✦ ✦ ✦

குவைத் நாட்டுப் பெண்களிடையே ஒரு நல்ல பழக்கம் இருக்கிறது. அதற்காக அவர்களை மிகவும் பாராட்டலாம். ஒரு குறிப்பிட்ட பகுதியில் திருமணம் நடக்கும் பெண்களுக்கு அந்தப் பகுதியில் வாழும் பெண்கள்... தங்களின் நகைகளை நாற்பத் தைந்து நாட்களுக்கு இரவல் கொடுத்து, தங்களின் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இப்படியொரு நிலை நம் நாட்டில் என்று உருவாகும்...?

✦ ✦ ✦ ✦

ஆப்பிரிக்க பழங்குடியினரில் குவாரி என்றொரு இனத்தினர் மணப் பெண்கள் திருமணத்தின் போது வாழையிலையினால் தலையைப் போர்த்திக் கொள்வார்கள்.

✦ ✦ ✦ ✦

எஸ்கிமோ பெண் தலைமுடியை சிவப்பு ரிப்பனால் கட்டியிருந்தால் திருமணம் ஆகாதவள்.

நீல நிற ரிப்பன் கட்டியிருந்தால் குழந்தை உள்ளவள் என்று பொருள்.

கருப்பு ரிப்பன் கட்டியிருந்தால் விதவை என்று பொருள். இப்படி அவர்கள் கட்டியிருக்கும் ரிப்பனைக் கொண்டே அவர்கள் நிலையை அறிந்து கொள்ளலாம்.

✦ ✦ ✦ ✦

ஆப்பிரிக்க நாட்டிலுள்ள இரன்வின்டாவில் வாழும் பெண்கள்தான் உலகிலேயே அதிக அளவில் பிள்ளை பெற்றுக் கொள்கிறார்களாம். யாரை அந்த நாட்டில் கேட்டாலும் சர்வ சாதாரணமாக பத்து, பதினைந்து பிள்ளைகள் என்பார்கள்.

✦ ✦ ✦ ✦

இங்கிலாந்தை 1837 முதல் 1901 வரை 64 ஆண்டுகள் அரசாட்சி நடத்தியவர் விக்டோரியா மகாராணியார். மிக நீண்ட காலம் இங்கிலாந்தை ஆண்ட அரசி இவர்தான்.

✦ ✦ ✦ ✦

ஜெண்டா என்ற நாட்டைச் சேர்ந்தவர்கள் 1615ஆம் ஆண்டு கார்சிகோ தீவில்புகுந்து அத் தீவில் பிறக்கும் குழந்தைகளை பறித்துக் கொண்டு போய் அவர்களை அடிமையாக்கி வந்தனர்.

இதை முறியடிக்க எண்ணிய கார்சிகோ தீவிலுள்ள பெண்கள் குழந்தைகளின் அடிமைத் தனம் நாட்டில் நீங்கும் வரை தனித்தே வாழ்வது என்று உறுதி பூண்டனர்.

பின், ஜெண்டா நாட்டைச் சேர்ந்தவர்கள் கார்சிகோ தீவிலிருந்து முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு விரட்டியடிக்கப்பட்டனர். அதுவரை அந்தத் தீவிலுள்ள ஒரு பெண் கூட உறுதியை - சபதத்தை மீறி குழந்தை பெற்றுக் கொள்ளவில்லை.

✦ ✦ ✦ ✦

பண்டைய கிரேக்க நாட்டில் ஸ்பர்ட்டாவில் முப்பது வயதிற்குள் திருமணம் செய்து கொள் ளாத பெண்கள் ஓட்டுப் போடும் உரிமையை இழந்து விடுவார்களாம்.

முதன் முதலாக பெண்களுக்கு வாக்குரிமை அளித்த நாடு நியூசிலாந்துதான்.

✦ ✦ ✦ ✦

ஜப்பானிய பெண்கள் இருபத்து ஐந்து வயதிற்கு மேல்தான் திருமணம் செய்து கொள்கிறார்கள். முப்பது வயதிற்கு முன்பே குழந்தை பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள்.

✦ ✦ ✦ ✦

பாகிஸ்தானில் பெண்கள் பொது மேடைகளில் மட்டுமல்ல, திரைமறைவில், வானொலியில் கூட பாடக் கூடாது. முடியாது. சட்டம் அப்படி. பாவம் அவர்கள் கூட்டில் அடைத்த குயில்கள்!

✦ ✦ ✦ ✦

சீனாவில், கர்ப்பிணிப் பெண் பேருந்தில் பயணம் செய்யும்போது, பேருந்திலேயே குழந்தை பெற்றால், அந்தக் குழந்தையின் வாழ்நாள் முழுதும் எந்த இடத்திற்கும் இலவசமாகப் பேருந்தில் பயணம் செய்யலாம் என்ற ஒரு சட்டத்தை சீன அரசு செயலாக்கியிருக்கிறது.

✦ ✦ ✦ ✦

ஒரு பெண்ணைப் பற்றி அவதூறு சொல்வதைக் காட்டிலும் ஓர் ஆலயத்தை எரிப்பது குறைந்த பாவம்.

– சொபியா

அபுதாபியில் உள்ள கலதியா டெல்மா என்ற பூங்காவிற்குள் பெண்களும், குழந்தைகளும் மட்டுமே செல்ல அனுமதியுண்டு! ஆண்கள் மூச்...

✦ ✦ ✦ ✦

எல்லன் சார்ச் என்ற அமெரிக்க நர்சுதான் முதன் முதலாகப் விமானப் பணிப் பெண்ணாகப் பணியாற்றிய பெண்மணி.

✦ ✦ ✦ ✦

ஜெர்மன் நாட்டுப் பெண் பார்பரா. இவர் ஒரு சிறந்த பைலட். 1987ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜெர்மன் விமானக் கம்பெனியில் முதல் பெண் பைலட்டாகத் தேர்வு செய்யப்பட்டார். இவர் கணவரும் ஒரு விமான ஓட்டிதான்.

✦ ✦ ✦ ✦

எந்த பெண்ணும் வெளியே சென்று வேலை பார்க்க வேண்டுமானாலும் கணவனிடம் ஒப்புதல் வாங்க வேண்டும். இந்தச் சட்டம் பெரு நாட்டில் இருக்கிறது.

✦ ✦ ✦ ✦

உலகின் முதல் பெண் காவலராகப் பணி யாற்றியவரின் பெயர், ஆலிஸ்வெல்ஸ். 1910இல் அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இவர் காவலராக பணியேற்றார்.

✦ ✦ ✦ ✦

எல்லோரையும் மலைக்க வைக்கும் சாதனை இது. சுவிட்சர்லாந்தில் 13,234 அடி உயரமுள்ள பனிமலையை எட்டு மணி நேரத்தில் ஏறி சாதனை புரிந்திருக்கிறாள் லாட்டே ஃப்ரூட்டினர் என்ற இலாசு. இவள் சாதனை புரிந்த போது அவளின் வயது எட்டே, எட்டுதான்.

✦ ✦ ✦ ✦

ஜப்பானில் பெண்கள் விடுதலை இயக்கத் தலைவி மிசாகோ செனாகி என்பவர். இப் பெண்மணி ஒரு பெண்களின் மேம்பாட்டிற்காக ஒரு தனிக் கட்சியையே தொடங்கியுள்ளார்.

✦ ✦ ✦ ✦

தற்போது ரஷ்யப் பெண்கள் கால்பந்தாட்டத் தில் தான் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். நீச்சல், ஜிம்னாஸ்டிக் போன்ற விளையாட்டிற்கு 'குட்பை' சொல்லி வருகிறார்கள்.

✦ ✦ ✦ ✦

உலகிலேயே முதல் பெண் பாதிரியார் நியூசிலாந்தைச் சேர்ந்த பெனிலோப் ஜாமிசன் என்பவர்.

✦ ✦ ✦ ✦

தற்போது அமெரிக்காவில் உள்ள எபிஸ் கோபால் சர்ச்சில் மெக்லிமோட் என்ற பெண்

பாதிரியாராக அமர்த்தப்பட்டிருக்கும் இவர் உலகிலேயே இரண்டாவதாக நியமிக்கப்பட்ட பெண் பாதிரியாராவார்.

✦ ✦ ✦ ✦

சைக்கிள் பந்தயப் போட்டிகளில் எட்டுத் தடவை உலக சாம்பியன் பட்டத்தைப் பெற்ற ஒரே பெண் ஜென்னி லாங்கோ என்ற வீராங்கனை தான். 1989இல் இந்த எட்டாவது சாதனையை நிகழ்த்தியுள்ளார். இந்தச் சாதனையை யாரும் இதுவரை முறியடிக்கவில்லை என்பது கூடுதலான செய்தியாகும்.

✦ ✦ ✦ ✦

1928ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் நகரில் நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில் தான் முதல் முதல் பெண்கள் பங்கு பெற்றனர்.

✦ ✦ ✦ ✦

இங்கிலாந்து பிரதமர் மார்க்கரெட் தாட்சர், ஒரு சாதாரண மளிகைக் கடைக்காரரின் மகள்.

✦ ✦ ✦ ✦

விண்வெளியில் பூமியின் சுற்றுப்பாதையில் சுற்றி வந்த முதல் ஜப்பானியப் பெண் முகைசிகெய் என்ற பெண்தான், ஆசியக் கண்டத்தின் முதல் விண்வெளி வீராங்கனையும் இவரேதான்.

✦ ✦ ✦ ✦

# கண்டறிந்தார் கண் மூடினார்!

மேரி கியூரி, ஒரு நாள் ஆய்வில் புற்று நோயைக் குணப்படுத்தும் கதிரியக்கக் கனிமமான ரேடியத்தைக் கண்டுபிடித்து விடவில்லை.

ஆய்வுக் கூடம் இல்லாத நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த மேரி தம்பதியினர், அவர் களுக்குரிய குதிரை லாயத்தையே ஆய்வுக் கூடமாக மாற்றி ஆய்வு செய்தனர்.

ரேடியத்தைக் கண்டறிந்த மேரி தம்பதியினரை உலகமே பாராட்டி மகிழ்ந்தது. இந்த நிலையில் கணவர் இறந்துவிட, துடித்துப் போனார் மேரி.

மேரியின் அறிவாற்றலைக் கண்டு உலக நாடுகள் அவரை வரவேற்றன. பதவியும் குவிந்தன.

பிறந்தது முதல் துன்பங்களையும், துயரங் களையுமே வாழ்வில் சந்தித்து, அவற்றை எல்லாம் தன் உழைப்பாலும், நம்பிக்கையாலும் தூள் தூளாக்கி சாதனை சிகரத்தைத் தொட்டு, உலகில்

அரும்பெரும் கண்டுபிடிப்புகளைத் தந்தார், மேடம் கியூரி.

அறிவியல் உலகமே வியந்து போற்றும் கனிமங்களை கண்டறிந்த மேரியின் மேனியின் உள் எலும்புகளை, அவர் கண்டுபிடித்த கதிர் வீச்சுக்களே சல்லடைபோல் துளைத்து, அவரை கல்லறைக்கு அனுப்பி விட்டது.

பெண்ணாகப் பிறந்து பெருமைக்குரிய இவ்வம்மையார் இரு முறை நோபல் பரிசு பெற்ற அறிவியல் ஆய்வுத் திலகம் 4.7.1934இல் மறைந்தார்.

ஆனால், அவர் கண்டுபிடித்த ஆய்வுகள் உலக மக்களின் உன்னத வாழ்வுக்கு உறுதுணையாக இன்னும் நின்று நிலவுகிறது.

இந்த ஆற்றல்மிகு அறிவியல் அறிஞர், குடும்ப சூழ்நிலையின் காரணமாக, படிப்பை பாதியிலேயே விட்டு, ஒரு வீட்டில் பணிப் பெண் வேலை செய்தவர். இருந்தும் உழைப்பால் உயர்ந்தவர். உழைப்பிற்கு நிகர் உழைப்பேதான்.

அசாம் மாநிலத்தின் தலைநகர் கௌஹாட்டி. இங்கே ஒரு மூதாட்டி தனது 63 வயதில் சட்டத் தேர்வில் தேறி, வழக்கறிஞராகப் பதிவு செய்து இருக்கிறார். இவரது கணவர் ஒரு வழக்கறிஞர். தன்னுடைய பெண் பிள்ளை இருவரையும் சட்டப் படிப்பில் சேர்த்தார். அவர்களுடன் கூடவே தாமும் படித்துத் தேர்வு எழுதி வெற்றியும் பெற்றுள்ளார். உழைப்பும், நம்பிக்கையும் இருந்தால், படிப்புக்கு வயது தடையே இல்லைதானே!

✦ ✦ ✦ ✦

சாதிக்க வேண்டும் என்று எண்ணம் கொண்ட வர்களுக்கு உடல் குறைபாடு ஒரு பொருட்டே இல்லை என்பதை இவரைப் பார்த்து நாம் உணர்ந்து கொள்ளலாம்.

ஆமாம், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் கரன். இப்பெண்மணிக்கு வயது 36. பத்து ஆண்டுகளுக்கு முன் விழி ஒளியை முற்றும் இழந்து விட்டார்.

விமானம் ஓட்டுவதில் ஆர்வம் கொண்ட இவர் பார்வை இழந்த பின்னரும் தன் எண்ணத்தையும், முயற்சியையும் முடக்கிக் கொள்ளாமல், தீவிரப் பயிற்சிக்குப்பின், கண் தெரியாத நிலையிலும் அருமையாக விமானம் ஓட்டுகிறார். வாரத்தில் மூன்று நாட்கள் வானத்தில் வலம் வருகிறார்.

✦ ✦ ✦ ✦

உலக அளவில் உயரம் தாண்டும் போட்டியில் முதல் முதலாக ஆறு அடி உயரம் தாண்டிய முதல் வீராங்கனை ருமேனியாவைச் சேர்ந்த அயோலாண்டா பாலஸ் என்பவர்தான். 1960 - 1964ஆம் ஆண்டு ஒலிம்பிக்குகளிலும், ஹைஜம்பில் தங்கத்தையும் வென்றார்.

✦ ✦ ✦ ✦

ஹாலவுட் நடிகைகளில் பலர் புகழ் பெற்று இருந்த போதிலும் கேதரின் ஹெப்பர் தனிச் சிறப்பு பெற்ற நடிகை.

இவர் நடிப்புக்காக நான்கு முறை ஆஸ்கார் விருது பெற்று கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றிருக்கிறார். இவர் கணவர் ஸ்பென் சர்ட்ரேசியுடனான இவரது வாழ்க்கை... பல ஆண்டுகள் நீடித்து மகிழ்ச்சிகரமாக இருந்தது. மேல் நாட்டில் இதையும் ஒரு சாதனையாகத்தான் கூற வேண்டும். கணவரும் ஆஸ்கார் பரிசு வாங்கியவர்தான்.

✦ ✦ ✦ ✦

அரேபிய பெண்களுக்கு அங்குள்ள அரசு பஸ்களிலும், ரயில்களிலும் எவ்வித கட்டணமும் கிடையாது. இலவசமாகவே எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்.

✦ ✦ ✦ ✦

மாதங்கினி ஹார்ஷா என்பது அவள் பெயர். இவளுக்கு கொல்கத்தாவில் ஒரு சிலை எடுத்திருக்கிறார்கள். காரணம். அந்தப் பெண்மணி இந்திய விடுதலைப் போராட்டத்தில் முன் நின்று உயிர் துறந்தவள்.

இவ்வாறு சுதந்திரப் போராட்ட வீராங்கனை யான ஒரு சாதாரண பெண்ணிற்கு சிலை யெடுத்துச் சிறப்பித்து, பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்கிறது மேற்கு வங்கம்.

✦ ✦ ✦ ✦

கணவன் மது அருந்தினால் கூட மண முறிவு செய்யலாம் என்ற சட்டம் உள்ள நாடு, பர்மா.

✦ ✦ ✦ ✦

நடிகை பானுமதிக்கு நடிப்போடு... கதை எழுதுவார், படம் இயக்குவார். வீணையும், வயலினும் வாசிக்கத் தெரிந்ததோடு மிருதங்கம், நாதஸ்வரம், தவில், கஞ்சிரா, கடம், மோர்சிங்கும் வாசிக்கத் தெரியும்.

✦ ✦ ✦ ✦

# புரட்சித்தாய்

அப்போது நாகம்மையாருக்கு வயது 13 தான். அந்த வயதிலேயே எதையும் போராடிப் பெற முடியும் என்ற உறுதியோடு இருந்திருக்கிறார்.

இன்றைக்கு ஏறக்குறைய 113 ஆண்டுகளுக்கு முன்பு சேலம் தாதம்பட்டியில் பிறந்தவர்தான், நாகம்மையார்.

இவர், ஈ.வெ.ராவுக்கு தூரத்து உறவு அல்ல. இரத்த உறவு கொண்டவராவார். ஆமாம்... ஈ.வெ.ரா. அவர்களின் தாயார் சின்னத்தாயின் ஒன்றுவிட்ட தம்பி மகள்தான் நாகம்மையார்.

பெண்ணடிமையும், சாதிக் கொடுமையும், மூடத்தனங்களும் அந்த காலத்தில் மண்டிக் கிடந்த காலம் அது.

வெள்ளிக்கிழமை விரதம், செவ்வாய்க்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கோயில், குளம் என்று மக்கள் ஈடுபட்டிருந்த காலம்.

பத்தாம் பசலித்தனமாக இருந்த நாகம்மை யாரை, ஈ.வெ.ரா. அவர்கள் தம்முடைய வேடிக் கைப் பேச்சுகளாலும், விளையாட்டான அதிரடி நடவடிக்கைகளாலும், மனம் மாறினார் நாகம் மையார். ஈ.வெ.ரா அவர்களுடன் இல்லற வாழ்வில் மட்டுமல்ல; அரசியல் சமுதாயப் பணிகளிலும் விரும்பி பணியாற்றினார்.

பிறந்த வீட்டில் படிக்காதவராயிருந்து, புகுந்த இடத்தில் கையொப்பமிடக் கற்று, படிப்படியாக சிறந்த அரசியல் தியாகியாய், வீராங்கனையாய், மேடைப் பேச்சாளருமாய், வாழ்க்கைத் துணை யாய் வளர்ந்து, புரட்சித் தாயானார்.

அது மட்டுமா? பகுத்தறிவுமிக்க கருத்தாளராகி, பத்திரிகைப் பதிப்பாளராய்... குடியரசு இதழின் ஆசிரியராய் வளர்ந்தார்.

இத்தகு ஆற்றல்களை அம்மையார் பெற்று விளங்கியதால்தான் அறிஞர் பெருமக்களின் சிந்தனைகளில் எல்லாம் சிறப்பாக உயர்ந்து நின்றார் - நிற்கிறார்.

கணவர் வாழும் போதே தாலியை அகற்றிய புரட்சியாளர் இவர். இன்று இதை நினைத்துப் பார்க்க முடியுமா?

மணமான இரண்டாமாண்டில் ஒரு பெண் மகவுக்கு தாயாகி ஐந்தாம் திங்களில் அம்மகவை இழந்தார்.

ஒரு மகவுக்கு மட்டுமே தாயாய் இருந்த அவர், அன்று முதல் மக்கள் எல்லார்க்கும் தாயாக மாறினார். அதுவும் புரட்சித்தாயாக.

வைக்கம் போராட்டம்... அஃறிணையாகிய ஆடு, மாடுகள், பன்றி, பூனைகள், நாய்கள் தெருவில் நடக்கலாம். ஆறறிவு கொண்ட மனிதன் அதே தெருவில் நடக்க அனுமதியில்லை.

இப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு இழைத்த ஆதிக்கச் சக்திகளை அடித்து நொறுக்க அப் போராட்டம் உதவியது.

தந்தை பெரியாரை சிறைக்குள் அடைத்தால் போராட்டம் நிற்குமென நினைத்தார் திருவனந்தபுரம் மன்னர்.

பெரியார் சிறை சென்ற பின் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ்.இராமநாதன் தலைமை யில் நாடு முழுவதும் விளக்கம் சொல்லி, ஆயிரக்கணக்கான மக்களைப் பங்கு பெறச் செய்து வெற்றியை ஈட்டியவர் வீரத்தாய், நாகம்மையார்தான்.

கரம் பிடித்த கணவர் சிறை சென்ற பின் கோழையாயிருந்து மூலையில் அமர்ந்து அழுது கொண்டிராமல் அவர் தொடங்கிய செயலை செம்மையாக முடித்தவர், இவர்.

ஈரோட்டில் தொடங்கிய இவருடைய சமூகப்

பணி, தமிழகத்தில் வளர்ந்து கடல் கடந்த நாடுகளுக்கும் பரவியது.

1929ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாநாட்டில் உருவாக்கப்பட்டு தோழர்கள் பகுத்தறிவு தலைவருடன் தமிழக வீதிகளில் வீர நடை போட்டபோது, பெண்ணினத்தின் பிரதிநிதியாக முன் நின்று நடத்திச் சென்றவர், புரட்சித்தாய், நாகம்மையாரே!

மேடைகளில் தன்மானக் கருத்துக்களை முழங்கினார். சாதி மறுப்புத் திருமணங்களும், கைம்பெண் மறுமணங்களும் நடந்தேற துணை நின்றார்.

தம்முடைய ஆற்றல்மிகு பேச்சால், பகுத்தறிவுப் பண்பால் பல மகளிரை தன்மான இயக்கத்திற்கு ஈர்த்தவரும், இந்த புரட்சித்தாய்தான்.

பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே தன்மானப் புரட்சிக்கு வித்திட, 1932ல் தந்தை பெரியார் மலேசிய நாட்டிற்குப் புறப்பட்டார்.

கடல் கடந்து செல்வதே பாவமெனக் கருதப் பட்ட அந்நாளிலே... தந்தை பெரியாருடன் அயல் நாடு சென்ற புரட்சிப் பெண்மணி நாகம்மையார்.

ஆண்களும், பெண்களுமாக கூலித் தமிழர்களாக அயல் நாடுகளுக்குச் சென்ற அந்நாளில் அரசியல் தலைவியாக அயல்நாடு

சென்று பகுத்தறிவு கொள்கை முழக்கமிட்ட முதல் பெண்ணரசி நாகம்மையார்தான்.

மலேசிய மக்களிடையே, இவர் பேசிய பேச்சாற்றலும், எடுத்து வைத்த கருத்துக்களும் அவர்களை சிந்திக்க வைத்தது. சீர்பட வைத்தது

இப்படி பெண்ணடிமைக்கு எதிரியாகி, மூடப் பழக்கங்களை கிள்ளி எறிந்து... போராட்ட வீராங்கனையாய் வலம் வந்து, பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்து, நல்ல வாழ்க்கைத் துணைவியாய் வாழ்ந்த அம்மையாரை வீரத்தாய் என்றே அழைக்கலாம்.

# இமயமாய் இந்திரா!

இந்தியாவின் முதல் பிரதமரான நேரு அவர்கள், தமக்குப் பெண் குழந்தை பிறந்தது என்று செய்தியறிந்ததும், மகிழ்ச்சிப் பெருக்கோடு அவர் சொன்னது இதுதான்...

'ஆயிரம் ஆண்களைவிட உயர்ந்தவள் என் பெண்.'

அவர் மகிழ்ச்சியடைந்தது போலவே, இந்தியாவின் முதல் பெண் பிரதமரான இந்திரா காந்தி இளமையிலேயே துணிவுடனும், நினை வாற்றலுடனும், நற்குணங்கள் கொண்டவராகவும் திகழ்ந்தார்.

இவரது வாழ்க்கையை மாற்றிப் போட்ட நிகழ்ச்சி இதுதான்.

பிரான்சைச் சேர்ந்த பெண், ஜோன் ஆப் ஆர்க். பிரான்சு படைக்குத் தலைமையேற்று பல போர்களில் வெற்றி பெற்ற வீரத்திலகமாவார். ஆங்கிலேயர்களின் வஞ்சக வலையில் சிக்கி, சிறைப்பட்டார்.

இவரது விசாரணை போப்பாண்டவரின் முன் நடந்தது. மாயக்காரி என்ற நிலையில் தீர்ப்பானது. அதனால், அவர் உயிரோடு நெருப்பிலிட்டுக் கொளுத்தப்பட்டார்,

இவரின் இந்த வரலாறு... இந்திரா காந்தியின் இதய்த்தில் தீ மூட்டியது. தீவிரம் காட்டியது. மக்களின் வாழ்வுக்காக பாடுபட வழி வகுத்தது.

நாடு விடுதலை வேள்வியில் எரிந்து கொண்டிருந்த நிலையில், அலகாபாத்தில் நடந்த கூட்டத்தில் ஆவேசமாக வீரக் குரல் கொடுத்தார்.

சும்மா இருக்குமா, நம்மை சுரண்ட வந்த வெள்ளை ஓநாய்கள்? இந்திராவோடு சேர்த்து அவரது கணவரான பெரோஸ் காந்தியையும் கைது செய்து நைனி சிறையில் போட்டது.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற நிலையில் சிறையில் இந்திராகாந்தி, சிறையில் மகிழ்வோடும், சுறுசுறுப்போடும் வலம் வந்தார். அங்கிருந்த பெண் குற்றவாளிகளுக்கு படிக்கவும், எழுதவும் கற்றுத் தந்ததோடு, சிறு சிறு கைத் தொழில்களையும் கற்றுக் கொடுத்தார்.

நேருவுக்குப் பிறகு, லால்பகதூர் சாஸ்திரி பிரதமரானார். அவருக்குப் பிறகு 1966இல் இந்திரா பிரதமரானார். இவரது ஆட்சியின் கீழ் பெண்ணின் மேம்பாடு இமயமாய் உயர்ந்தது. பெண்கள் வீட்டில் இருந்தபடியே தொழில் செய்ய

ஊக்கம் கொடுத்ததோடு, அதற்கு வேண்டிய உதவிகளையும் செய்து கொடுத்தார். பெண்களை எல்லா துறைகளிலும் முன் நிற்க பாடுபட்டார். உடல் திறன் அவர்கள் அடைய, விளையாட்டுத் துறையில் உயர வழி வகுத்தார்.

பெண் மனதில் நல்ல இடத்தைப் பெற்ற இந்திரா, 'தேச நலனில் எனக்கு 'மரணமே நேர்ந்தாலும் மகிழ்ச்சியடைவேன்' எனது ஒவ்வொரு துளி இரத்தமும் இந்நாட்டின் வளர்ச்சிக்காவும், நாட்டின் ஒற்றுமைக்காகவும் பாடுபடுவேன்' என்று மனம் திறந்து 1984 ஆண்டு அக்டோபர் திங்கள் முப்பதாம் நாள் பேசினார். மறுநாள் 31.10.1984 அன்று கொடியவன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தியாவின் இணையற்ற ஜோன் ஆப் ஆர்க் என்று புகழப்பட்டு, உலகம் போற்றிய இந்திரா காந்தி பெண்ணினத்திற்கு ஆற்றிய தொண்டு - பெண்ணினத்திற்குத் தந்த பெருமை, அரசியல் வானில் துருவ நட்சத்திரமாக ஒளி வீசத் திகழ்ந்தார்.

இந்திய நாட்டின் பெருமையை உலகெங்கும் பரப்பியவர். தேச நலனில் அக்கறை கொண்ட ஒவ்வொரு இந்தியனின் இதயத்திலும் தேசப் படமாய், தேயாத நிலவாய் நின்று நிலைத்தார்.

# ஏழைகளைத் தாங்கிய இதயம்!

அன்பின் மறுபெயர் அன்னை தெரசா! ஏழை, எளியவர்களுக்காகவும், நோயுற்றவர் களுக்காகவும், ஆதரவற்றக் குழந்தைகளுக்காகவும், இந்திய நாட்டில் உலா வந்த கார் மேகம் - கருணை மேகம்.

விழியற்றவர்களுக்கு ஒளியாய் இருந்தார். காது கேளாதோருக்கு ஒலியாய் இருந்தார். ஊனமுற்றவர்களுக்கு ஊன்றுகோலாய் இருந்தார். ஆதரவற்ற குழந்தைகளுக்கு தாயாய் இருந்தார். மனித குலத்திற்கு அருமருந்தாய் இருந்தார். அன்பாய்த் திகழ்ந்தார்.

அல்பேனியாவில் பிறந்த அற்புதப் பிறவி, இந்தியா வில் தன்னை இணைத்துக் கொண்ட பெருமாட்டி.

இவர் இதயம், இந்திய மக்களின் மேன்மைக் காகவே நாளும் பொழுதும் துடித்தது எனலாம்.

குறிப்பாக ஏழைகள், மீதும், நோயினர் மீதும் அளப்பறிய அன்பு கொண்டிருந்தார். வாழ்நாள் முழுதும் உழைத்துக் கொண்டிருந்தார்.

அன்னை அவர்கள், இந்திய மக்களின் ஏழ்மை நிலையையும், விழிப்புணர்வு அற்ற நிலையில் நோயோடு போ:ராடும் நிலையையும் கண்டு, தன் நாட்டில் இருந்து இந்தியா வந்தவர். மக்களுக்குத் தொண்டு செய்ய விழைந்தவர்.

தமது பணிச் சேவையை கொல்கத்தா வந்திறங்கிய அன்னை - மிகவும் ஏழ்மை நிலையில்; சுகாதாரமற்ற நிலையில் பன்றிகளோடும், மாடுகளோடும் ஒன்றாக வாழ்ந்து கொண்டிருந்த மோத்திஸ் என்ற சேரிப் பகுதியில் ஐந்து ருபாய்க்கு ஒரு வாடகைக் குடிலை எடுத்து, ஐந்து சேரிக் குழந்தைகளுக்கு பாடம் சொல்லும் நிலையில்தான் இவர் பணி தொடங்கியது. பள்ளி மரத்தடியில் தான் நடந்தது. உட்கார நாற்காலி அன்றைக்கு இல்லை.

சேரிக் குழந்தைகளை பாதுகாக்க தினமும் கடை வீதிகளிலுள்ள கடைகளில் கையேந்தினார். பிச்சை எடுத்தார் என்றே சொல்லலாம்.

இப்படி, ஏழை, எளியவர்களுக்கு சேவை செய்யத் தொடங்கிய அன்னை ஒரு நாள், காரில் சென்று கொண்டிருந்தபோது, ஒரு செயலைக் கண்டு திடுக்கிட்டு... வண்டியை நிறுத்தச் சொன்னார். அவ்வேளையில்... ஒரு பெண், தான் பெற்றெடுத்த உயிருடன் இருந்த குழந்தையை குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுப்

போவதைக் கண்டார்.

வண்டியில் இருந்து வேகமாக கீழே இறங்கிய அன்னை பதறியபடியே குப்பைத் தொட்டியிலிருந்த அன்று மலர்ந்த அந்தக் குழந்தை மலரை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டார். தான் பெற்ற குழந்தையை இந்த நிலையில் விட்டுச் செல்ல நேர்ந்த அந்தப் பெண்ணின் நிலையை எண்ணி வேதனைப்பட்டார்.

இந்த நிலையில்தான் 1955இல் சிசு பவனத்தைத் தொடங்கினார். அந்த வேளையில் அன்னை சொன்னது இதுதான்.

'உலக சமாதானத்திற்குச் சாவு மணி அடிப்பவர்கள் மனிதன் மனிதனைக் கொல்வதற்கும், தாய் தன் குழந்தைக் கருவைச் சிதைப்பதற்கும் வேறுபாடே இல்லை.

நமது பெற்றோர் நம்மைக் கருச்சிதைவு செய்திருந்தால் நாம் இந்தப் பூமியில் பிறந்திருப்போமா? எனவே, யாரும் கருச்சிதைவு செய்யாதீர்கள். பெற்றெடுத்து என்னிடம் தாருங்கள். நான் அவர்களை வளர்க்கிறேன், என்றார்.

சிசு பவனத்தில் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்ட குழந்தைகள், உடல் ஊனமுற்ற குழந்தைகள், பெற்றோர்களுக்குச் சுமையாய் உள்ள குழந்தைகள் என இன்று பல ஆயிரம் குழந்தைகள் நலம் பெற்று வருகின்றன.

அதே நிலையில், தொழுநோயினரின் பாது காப்பிற்காக குடியிருப்பு ஒன்றினை சாந்தி நகரில் ஏற்படுத்தினார்.

அன்னையின் சேவை இல்லங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இன்று இயங்கி வருகின்றன.

ஆதரவற்ற குழந்தைகளுக்காக - சிசு பவனம், தொழு நோயாளிகளுக்காக - சுகாதார இல்லம், முதியோருக்காக கருணை இல்லம்.

இன்று மொத்த சேவை மையங்கள் ஐந்நூற் றுக்கும் மேலாக இயங்கி வருகின்றன.

இம்மையங்களில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட அருட் சகோதரிகளும், ஐநூறுக்கு மேற்பட்ட அருட்சகோதரர்களும் அன்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் மட்டுமே இருநூறு மையங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றன.

இந்தியாவில் எய்ட்ஸ் நோயின் வருகையைக் கண்டு மனம் கலங்கிப் போன அன்னை, தான் இறப்பதற்கு முன் கூட நான்காவது சேவை மையமாக எய்ட்ஸ் நோயாளிகளுக்கு ஓர் இல்லத்தையும் தொடங்கினார்.

அன்னையைப் போல் ஆதரவற்றவர்களை ஆதரித்தவர் உலகில் எவரும் இல்லை. ஆயிரம், ஆயிரம் ஆதரவற்ற குழந்தைகளுக்கும், தொழு

நோயினருக்கும், பிள்ளைகளால் கைவிடப்பட்ட வயது முதிர்ந்தோருக்கும் கருணையின் கலங்கரை விளக்காக; அன்பின் ஆலயமாக வாழ்ந்து, பலரது இதயங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அன்னையை உலக மக்களே இன்றும் போற்றி வழிபடுகின்றனர்.

உலகம் முழுதும் புகழ் பெற்ற அன்னையைப் போல் ஐம்பதுக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றவர் இவ்வுலகில் எவருமே இல்லை. நோபல் பரிசு சமாதானத்திற்காகவும் பெற்றார். அப் பரிசில் பெற்ற தொகை முழுவதையும் நலிந்தோர் நலனுக்காகவே செலவிட்டார்.

அனைத்திந்திய விமான நிலையங்களும் இவர் இலவசமாகவே எங்கும் பயணம் செய்யலாம் என்ற பொதுவான சலுகையை அளித்திருந்தன.

அதையும் அவர் ஒரு போதும் பயன்படுத்திக் கொண்டதில்லை. மிக, மிக அவசியமாக இருந் தால் மட்டுமே பயணத்தை மேற் கொண்டிருந்த அவர், அதற்கும் பயணக் கட்டணம் செலுத்தி விட்டுத்தான் சென்றார். இப்படி ஒரு மனிதப் புனிதவதியை உலகில் கண்டதுண்டா?

✦ ✦ ✦ ✦

1994ஆம் ஆண்டு துருக்கி நகரில் நடந்த உலகப் பளு தூக்கும் போட்டியில் 63 கிலோ எடைப் பிரிவில் கலந்து கொண்டு 205 கிலோ எடையைத் தூக்கி உலக சாதனை நிகழ்த்தி, இந்தியாவின் புகழை உயர்த்தினார். சிட்டினி ஒலிம்பிக் போட்டியில் 240 கிலோ எடை தூக்கியும் வெற்றி பெற்றார். யார் இந்த சாதனையாளர்?

ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற்ற கர்ணம் மல்லேஸ்வரிதான்.

செலவுக்காக - சிறு சிறு தொகைக்காக கந்தல் துணிகளையும், குப்பைக் காகிதங்களையும் பொறுக்கி வந்த சில சிறுவர்களுக்கு அப்பண்ணா என்ற பயிற்சியாளர் பளு தூக்கும் பயிற்சியை அளித்து வந்தார்.

அவர்களில் ஒருவர்தான் மல்லேஸ்வரி என்பது கூடுதலான செய்தியாகும்.

இந்த விளையாட்டு வீராங்கனை உலகப் சம்பியன் பட்டத்தை 1994, 1995 ஆகிய இரு ஆண்டுகளில் வென்று உயர்ந்தார்.

காரட் ஆண்டர்சன் என்பவரே உலகின் முதல் பெண் டாக்டர். தத்துவ மேதை பெட்ரான்ட் ரஸ்ஸல் பிறக்கும்போது, அவரது தாயாருக் மகப்பேறு பார்த்த மருத்துவர் இவரே.

✦ ✦ ✦ ✦

பெமிதா பாத்திமா வயது 17, சாஜிதா வயது 16, மெஹருன்னிசா வயது 15, இவர்கள் மூவரும் 40 நிமிடங்களில் 1330 குறளையும் பாராமல் ஒப்புவித்து அசத்துகிறார்கள். தமிழ்நாட்டில் தான்!

✦ ✦ ✦ ✦

சென்னை, கீழ்ப்பாக்கம், கே.ஜி.காலனி முகவரியில் இருந்து உயிர் பிரியும் நிலையில் உள்ளவர்களின் உயிரைக் காக்கும் வகையிலும், அவர்கள் உயிர் வாழும் நேரத்தை சிறிது நீட்டிக் கும் வகையிலும் பாதுகாத்து ஆம்புலன்ஸின் துணையுடன் உதவி புரிவதில் இந்தியாவில் முதன் முதலில் சாதனை புரிந்து வருகிறார் லலிதா சாந்தகுமார். இந்த ஆம்புலன்ஸ் லேடியின் சாதனையைப் பாராட்டாதவர்களே இல்லை. இவர் ஒரு பட்டதாரியும் கூட.

✦ ✦ ✦ ✦

முன்னாள் சைக்கிள் வீராங்கனை கார்மென் அலிசியா மியூனிஸ், வயது 62 தான். இவர் 1950, 60, 70 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர். இவர் சமீபத்தில் தொடர்ந்து 26 மணி நேரம் சைக்கிள் ஓட்டி சாதனை படைத்துள்ளார். இவரது சாதனை கின்னஸிலும் இடம் பிடித்துள்ளது.

✦ ✦ ✦ ✦

இரண்டாம்வகுப்பு படிக்கும்போதே திருப் பாவையை மனப்பாடம் செய்து பள்ளியில் பாராட்டுப் பெற்ற யசோதா, 6ஆம் வகுப்பு படிக்கும் போது, 1330 திருக்குறளையும் மனப் பாடம் செய்து எல்லோரையும் அசத்தி வருகிறாள் இந்த இளசு. அருப்புக்கோட்டை - பெரிய் புளியம்பட்டிதான் இவளது ஊர்.

✦ ✦ ✦ ✦

சுவீடன் நாட்டில் ஆண்டுதோறும் குழந்தைத் தொழிலாளர்கள் நலனுக்காகப் பாடுபடும் அமைப்பிற்கு, குழந்தைகள் உரிமைக்கான நோபல் பரிசு, உலக அளவில் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பரிசினை 2004 ஆண்டு தமிழகத்தில் உள்ள திண்டுக்கல் 'அமைதி அறக் கட்டளை' என்ற அரசு சாரா அமைப்பினை 24 ஆண்டுகளாக நடத்தி வரும் தம்பதியினரான மெர்சி பால்பாஸ்கரும் சுவீடன் சென்று பெற்று வந்திருக்கிறார்கள்.

✦ ✦ ✦ ✦

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள புதுவட வள்ளியில் உள்ள நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வருகிறாள், பரிமளம். வயது 13. இதே பள்ளியில் 3வது படிக்கும் மற்றொரு மாணவி எஸ்.மைதிலி வயது 13. பழங்குடி இனத்தைச் சேர்ந்த இந்த இரண்டு மாணவிகளும்

1330 திருக்குறளையும் மனப்பாடமாக ஒப்புவித்து, பாராட்டுப் பெற்று வருகிறார்கள்.

✦ ✦ ✦ ✦

சைக்கிள், ஸ்கூட்டர், கார் என்று வாகனங்களை ஓட்டத் தொடங்கிய ஒருவர், இப்போது புல்டோசரை ஓட்டத் தொடங்கி இருக்கிறார்.

அவரது பெயர், திலகம். நெல்லை மாநகராட்சியில் லாரி ஓட்டுனராக இருந்தவர். தற்போது சென்னைக்கு மாறி வந்து இங்கு தன் பணியினைத் தொடங்கியுள்ளார்.

✦ ✦ ✦ ✦

இதுவரை எழுபதுக்கு மேல் சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டு பல வெற்றிகளை பெற்றிருந்த போதிலும், 1995இல் சென்னையில் நடந்த தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 800 மீட்டர் தூரத்தை 1.59 நிமிடங்களில் ஓடி உலக சாதனையை முறியடித்ததை பெருமையாகப் பேசுகிறர் விளையாட்டு வீராங்னை, ஷைனி ஆப்ரஹாம்.

✦ ✦ ✦ ✦

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் நடனத்துறை மாணவி, சங்கீதா. வயது 21.

இவர் புதுச்சேரி கடற்கரையில் மூன்று நாள்கள்

தொடர்ந்து நடனமாடி சாதனை படைத்துள்ளார்.

✦ ✦ ✦ ✦

கதைகள் படிப்பவர்களுக்கு உலக அளவில் அறிமுகமானவர் அகதா கிறிஸ்டி என்பவர். மர்மக் கதை எழுத்தாளர். இவர் எழுதிய நாவல்களின் எண்ணிக்கை 87.

இவை உலகம் முழுதும் 300 மில்லியன் பிரதிகள் விற்பனையாகி உள்ளன.

இவருடைய இந்த நாவல்கள் 103 மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இது ஒரு உலக சாதனை.

✦ ✦ ✦ ✦

ட்ரூனா நிஷாத்துவிற்கு நாலரைதான் வயது. சுறா மீனைப் போல நீச்சலில் வேகம் கொண்டு இருக்கிறாள். அதனால், உலக சாதனையும் படைத்திருக்கிறாள். நிஷா 6.050 மீட்டர் தூரத்தை 6.39 மணியில் நீந்தி சாதனை படைத்துள்ளாள். இவளுக்கு முன் ஐந்தரை வயதுச் சிறுவன் பாலாஜி 5.600 மீட்டர் நீந்தியது உலக சாதனையாக இருந்தது. இதை முறியடித்து, இவளே தற்போது முன் நிற்கிறாள்.

✦ ✦ ✦ ✦

# பெண்ணினத்தின் பொன் விளக்கு!

சிலரது வாழ்க்கை வரலாறு நம்மை மலைக்க வைக்கிறது. திகைக்க வைக்கிறது...

இந்த பெண் திலகத்தின் வரலாறும் அப்படித் தான்... தமிழகத்தில் பெண் உரிமைக்காக போராடிய முதல் பெண்மணி...

முதல் முதலாக தமிழக சட்டமன்றத்தில் உறுப்பினரான தமிழ்ப் பெண்மணி...

ஆதரவற்ற பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், ஆதரவளிக்க சென்னையில் அவ்வை இல்லம் கண்ட கருணைப் பெண் திலகம்.

சென்னை நகரசபையின் 'ஆல்டர் மேன்' பதவி ஏற்ற (1937) முதல் பெண்மணி... 1917இல் தோன்றிய 'இந்தியர் மாதர் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினராக இணைந்து பெண்களின் நல் வாழ்வுக்காகத் தொண்டாற்றியவர்.

*1930-ல் காந்தியடிகள் கைது செய்யப்பட்ட போது அதை எதிர்த்து, தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியையும்... துணைத் தலைவர் பதவியையும் தூக்கி எறிந்து விட்டு வெளியேறிய வீராங்கனையாவார்...*

*சென்னையில் புற்றுநோய் மருத்துவமனை தோன்ற மூலவராய் இருந்தவர்...*

*தமிழகத்திலேயே டாக்டர் பட்டம் பெற்ற முதல் பெண் மருத்துவர்...*

*தமிழ்நாட்டுப் பெண்களுக்கு வோட்டு உரிமை பெற்றுத் தந்தவர்...*

*தன் வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றிய தற்காக மத்திய அரசினால் "பத்மபூஷன்" விருது பெற்றவர்...*

*இத்தனை பெருமைக்கும் உரிய பெண்ணரசி யார்?*

*அவர் தான் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி அம்மையார்தான்.*

2007இல் உலக மகளிர் தின நாளில்... வாயில் கயிறு கட்டி மூன்று வேன்களை இழுத்தார். ஒரு மாணவி.

இம்மாணவி, சென்னை முகப்பேர் வேலம்மாள் மேல் நிலைப் பள்ளியில் படித்து வரும் அப்சராதான் அந்த சாதனைப் பெண்.

✦ ✦ ✦ ✦

குறைந்த நேரத்தில் அதிக தூரம் வேகமாக ஓடி, கின்னஸ் சாதனை படைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பயிற்சி பெற்று வரும் இவர். 29.4 கிலோ மீட்டர் தூரத்தை 169 நிமிடங்களில் ஓடி, சாதனை படைக்கும் எண்ணம் கொண்ட இந்தத் தளிரை, தமிழக முதல்வர் மு.கருணாநிதி, நேரில் வரவழைத்து, ஒரு இலட்சம் நிதி உதவியும் வழங்கியுள்ளார்.

இவர் மதுரையை அடுத்துள்ள வில்லா புரத்தைச் சேர்ந்தவர்.

✦ ✦ ✦ ✦

தொண்டிற்கென்றே பெண் பிறந்தாள்; படித் தாள்; மணங் கொண்டாள்; வாழ்கிறாள் என்று கூறலாம்.

– வி.ஸா.காண்டேகர்

# எதிர்கால கின்னஸ் நாயகி!

டாக்டர் வி.ஜமுனா அவர்கள் கடந்த கால் நூற்றாண்டுகளாக சித்த மருத்துவத் துறையில் சிறப்பாக பணியாற்றி வருபவர். குழந்தைப் பேறின்மை, குறைகளுக்கு மட்டுமே சிகிச்சை அளித்து வருகிறார்.

பெண்களுக்கு கருக்குழாய் அடைப்பு, கால ஒழுங்கற்ற மாதவிடாய், ஆண்களுக்கு உயிர ணுக்கள் அறவே இல்லாமை போன்றவைதான் குழந்தைப் பேரின்மைக்கான முக்கிய காரணங் களாகும்.

இந்திய மருத்துவ முறையில் தன் கடுமையான உழைப்பின் மூலம் மேற்கூறிய மிகப் பெரிய குறைகளை நீக்கி, இயற்கையான முறையில் கருத்த ரிக்கச் செய்கிறார். இந்த மாபெரும் சாதனையை சத்தமில்லாமல் சென்னை - தாம்பரம் - சானடோரியத்தில் இருந்து செய்து வருகிறார்.

இவரிடம் 250க்கும் மேற்பட்ட அலோபதி மருத்துவர்களே சிகிச்சையுயு பெற்று, குழந்தை

செல்வத்தைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களில் 90 பேர் கணவன் - மனைவி இருவருமே மருத்து வர்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இன்றைய தேதி வரையில் 5,700 குழந்தைகளை, குழந்தைப் பேறில்லாத தம்பதியினருக்கு தனியொரு மருத்துவராக இருந்து உருவாக்கித் தந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார். இந்த அளவில் செய்து வருவது, உலகளவில் எவருமில்லை என்றே கூறலாம்.

இந்தளவில் இவரது உழைப்பையும், சித்த மருத்துவத் திறமையையும் பல்வேறு தரப்பினர் - பல்வேறு நாட்டினர் போற்றிப் புகழ்கின்றனர்.

விரைவில் இவரது சாதனை குறித்து கின்னஸிற்கு அனுப்ப ஏற்பாடு நடந்து வருகிறது.

✦ ✦ ✦ ✦

எவரெஸ்ட் சிகரத்தை முதன் முதலாக எட்டிப் பிடித்த முதல் இஸ்லாமிய பெண் குழு என்ற பெருமையை இவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

ஈரான் நாட்டைச் சேர்ந்த ஆறு பெண்மணிகள் தான் இந்த உலக சாதனையைச் செய்திருக்கிறார்கள்.

இக்குழுவில் இடம் பெற்றவர்களில் ஒருவர் பல் மருத்துவர். மற்றொருவர் வீடுகள் அலங்கரிப்பு வல்லுநர். மற்றவர்கள் இல்லத்தரசிகள்.

✦ ✦ ✦ ✦

# திசையெல்லாம் போற்றும் தில்லையாடி

தில்லையாடி வள்ளியம்மை திட சிந்தனையும் தீரமிக்க மன உறுதியும் கொண்டிருந்தார்.

பெண்களின் மேன்மைக்காகவும், சாதி வெறியை ஒழிப்பதற்கும் பாடுபட்டார்.

தென்னாப்பிரிக்காவில் அண்ணல் காந்தியாருடன் சேர்ந்து நிறவெறி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக அவரை அந் நாட்டினர் சிறைபடுத்தினர்.

அப்போது அவருக்கு வயது 17 தான். சிறையில் அந்நியரின் கொடுமை தாங்காமல், விடுதலை செய்யப்பட்டார். சிறையிலிருந்து வெளி வந்த சில நாள்களிலேயே உயிர் துறந்தார்.

மணவிழா கூட நிகழாத நிலையில் அவர் வீர மரணம் அடைந்தார். காந்தியடிகள் தமிழ்நாட்டில் பயணம் மேற் கொண்டபோது, மயிலாடுதுறைக்கு

அருகிலுள்ள தில்லையாடி என்ற கிராமத்திற்குச் சென்று, அன்னாரின் இல்லம் சென்று அஞ்சலி செலுத்தினார்.

தில்லையாடி வள்ளியம்மை, ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

✦ ✦ ✦ ✦

மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனில் இன்றாம்.

- மணிமேகலை

✦ ✦ ✦ ✦

தொட்டிலை ஆட்டுகின்ற கரங்களே உலகை ஆளுகின்ற கரங்கள்.

- டப்ளியூ எஸ்.ராஸ்

✦ ✦ ✦ ✦

# காந்தியின் உயிர்த்துணை

**கா**ந்தியடிகளின் அன்புத் துணைவியார் தான் கஸ்தூரிபாய். அன்பும், அறநெறியும், நாட்டுப் பற்றும், மனித நேயமும் இளமையிலேயே கொண்டவராக இருந்தார்.

1915–ஆம் ஆண்டு காந்தியடிகள் இந்தியா திரும்பியவர். சபர்மதி ஆசிரமத்தைத் தோற்றுவித்தார். ஆசிரமத்தில் இருபது பேர் இருந்தனர். அவர்கள் யாவருக்கும் கஸ்தூரி அம்மையாரே தாயாகவும், தாதியாகவும் இருந்தார். 1924ஆண்டு இந்து முஸ்லீம் என்று வேறு பாடு தோன்றிய பொழுது, இரு மக்களிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்த விரும்பிய காந்தியடிகள் 21 நாள் உண்ணா நோன்பு மேற்கொண்டார். இந்நிலையில் அருகிலிருந்து அவருக்குத் துணையாக பணி புரிந்து அவரது உயிரைக் காத்தவர். அன்னை கஸ்தூரி பாயே!

இந்திய நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட அன்னையாரை ஆங்கில அரசு பல முறை சிறைப்படுத்தியது.

1942ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 9ஆம் நாள் மும்பையில் பிர்லா மாளிகையில் தங்கியிருந்தபோது அன்னையார் வெள்ளையர் களால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்த அன்னையாரை, புனா சிறையில் காவலில் வைத்தனர்.அவ்வேளையில் இதயக் கோளாறு ஏற்பட்டு, இந்தியாவின் விடுதலையைக் காணாத நிலையிலேயே கண்மூடிப் போனார். சிறைக் காவலில் முதன் முதலாக உயிர் துறந்த விடுதலை வீராங்கனை கஸ்தூரி பாயே!

அன்னை இறந்தபோது 'என்னுடைய பெருமைக்கெல்லாம் அவளே காரணம்' என்று சொல்லி கண்ணீர் சிந்தினார் காந்திஜி.

✦ ✦ ✦ ✦

ஒரு பெண் இரு முறை வீட்டை விட்டுப் போகலாம். ஒன்று திருமணம். அடுத்து மரணம்.

- ஸ்காட்லாந்து பழமொழி

✦ ✦ ✦ ✦

சுசீலா நய்யார், இவர்தான் இந்திய பாராளு மன்றத்தின் முதல் பெண் சபாநாயகர்.

இத்தோடு மேலும் பல சிறப்புகள் இவருக்குண்டு...

இவர் ஒரு மருத்துவர். காந்திஜிக்கு மருத்துவம் பார்த்தார். தேசத் தந்தையும், அவரது மனைவியும் இந்திய விடுதலைப் போராட் டங்களில் ஈடுபட்டு சிறை புகும்போது இவரும் சிறை புகுந்தார்.

இவர்களுக்கு மருத்துவம் பார்ப்பதற்காகவே அவரும் போராட்டங்களில் கலந்து கொண்டார்.

இந்த அளவிற்கு தேசப் பற்றுடன் பொது நலத் தொண்டிலும் அக்கறை கொண்ட இந்த வீராங்கனை கடைசி வரை திருமணம் செய்து கொள்ளவில்லை.

✦ ✦ ✦ ✦

பாரத ரத்னா விருது பெற்ற முதல் பெண் இசைக் கலைஞர் எம்.எஸ்.சுப்புலட்சுமி அம்மையார்.

✦ ✦ ✦ ✦

இந்தியாவில் தேர்தல் மூலம் தேர்ந்து எடுக்கப்பட்ட முதல் பெண் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா.

✦ ✦ ✦ ✦

மாரத்தான் தூரம் முழுவதையும் ஓடிக் கடந்த விளையாட்டு வீராங்கனை சுதா மாதவன் இந்தியாவின் முதல் மாரத்தான் வீராங்கனை இவரேதான்.

✦ ✦ ✦ ✦

உலக வரலாற்றில் மிகச் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகப் போற்றப்படுகிறவர் ஜாக்கி ஜாய்னர் என்ற அமெரிக்க வீராங்கனைதான்.

03.03.1962இல் பிறந்த இவர் ஹெப்த்லான் போட்டியில் 7000 புள்ளிகள் வென்ற முதல் சாதனையாளர் என்ற உலக சாதனையை தம் 24ஆவது வயதில் பெற்றார்.

நான்கு முறை அதிகப் புள்ளிகள் வென்ற உலக சாதனையாளர் இவர்தான். 1998ஆம் ஆண்டும் 1992 ஆம் ஆண்டும் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்றார். இதன் மூலம் ஹெப்த்லான் விளையாட்டுக்காரரர் என்ற சிறப்பையும் பெற்றார்.

தடைகளப் போட்டியைப் போலவே கூடைப்

பந்து விளையாட்டிலும் சிறந்தவர். நீளம் தாண்டுதலின் உலக சாதனை (1987)இல் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் (1988) இல் 100 மீட்டர் தடைத் தாண்டுதல், 200 மீட்டர் ஓட்டப் பந்தயம் மற்றும் உயரத் தாண்டுதல் போன்ற விளையாட்டு களிலும் உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

✦ ✦ ✦ ✦

முப்பது வயதில் மத்திய அமைச்சராகப் பதவி ஏற்ற... இளம் வயது முதல் மத்திய அமைச்சர் செல்ஜா குமாரி. ஆண்டு 1992.

✦ ✦ ✦ ✦

அமெரிக்காவின் முதல் பெண் கவிஞர் மற்றும் எழுத்தாளர் அன்னி பிராட்ஸ் ட்ரீட் (1659)

✦ ✦ ✦ ✦

அமெரிக்காவின் முதல் பெண் புத்தகப் பதிப்பாளர், மேரி காத்தரின் கோடார்ட் (1775)

✦ ✦ ✦ ✦

சோவியத் யூனியனின் நாயகிகளுள் ஒருவராக இரண்டு முறை தேர்வு செய்யப்பட்டவர். வாலண்டினா தெரஸ்கோவா என்ற பெண் மணியே.

இவர் இரண்டு முறை நாயகி விருதைப் பெற்றாலும் இவர் இரண்டாவது முறையாக விண்வெளிக்குச் செல்லவில்லை.

தம் 26ஆவது வயதில் வோடாக் 6 விண் வெளிக் கலத்தில் சென்ற இவர் 71 மணி நேரத்தில் 48 முறை பூமியின் சுற்றுப் பாதையில் சுற்றி விட்டுத் திரும்பினார்.

அதன் பிறகு 37 ஆண்டுகள் அரசு பணியில் பணியாற்றினார். சரி, இதில் என்ன செய்தியிருக்கிறது?

விண்வெளிக்குச் சென்ற முதல் வீராங்கனை வாலன்டினாதான். இவர், சிறந்த பாராசூட் வீராங்கனையாகவும் திகழ்ந்தார்.

இருந்தும் பொருளாதாரப் பாதுகாப்பிற்காக அரசு வேலையிலேயே பின்னாளில் நிலைத்து விட்டார்.

✦ ✦ ✦ ✦

அமெரிக்காவின் முதல் பெண் பல் மருத்துவர், லூசி ஹோப்ஸ் டெய்லர் (1867).

தொலைக்காட்சியில் செய்தி வாசித்த முதல் அமெரிக்கப் பெண்மணி. பார்ப்பரா வால்டர்ஸ் (1974).

அமெரிக்கத் திரையுலக வரலாற்றில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற முதல் பெண்மணி பெட்டி டேவிஸ் 1977)

✦ ✦ ✦ ✦

தமிழகத்தில் முதல் ஐ.பி.எஸ். திலகவதி. இவர் காவல்துறை அதிகாரி மட்டுமல்ல. சிறுகதை நாவல், கடடுரை என்று எழுதும் எழுத்தாளரும், கவிஞரும் கூட.

✦ ✦ ✦ ✦

இந்திய அளவில் முதல் ஐ.பி.எஸ். கிரண் பேடியாவார்.

✦ ✦ ✦ ✦

இந்தியாவின் புனிதப் பெண்ணாக சாவித்திரி, கண்ணகி போன்ற பெண்கள் போற்றப்படு கின்றனர்.

இந்த நிலையில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தின் தலைமையிடமான வாடிகன் நகரம். இந்தியாவில் புனிதராக கேரளாவைச் சேர்ந்த கன்னியாஸ்திரி சகோதரி அல்போன்சா என்பவரை அறிவித்தது. புனிதரான முதல் இந்திய கிறிஸ்தவப் பெண் அல்போன்சா தான்.

✦ ✦ ✦ ✦

யூஃபெமியஸடேட்லர் என்ற சுவிட்சர்லாந்து நாட்டுப் பெண்மணி தொடர்ச்சியாக 40 மணி நேரம் நின்று கொண்டே 228 சட்டைகளை சலவை செய்து கொடுத்தார். இதை கின்னஸ் அதிகாரிகள் பார்த்து ஒப்புதல் வழங்கினர். இதற்காகப் பல மாதங்கள் நின்று கொண்ட நீண்ட நேரம் சலவை செய்து பயிற்சி பெற்றாராம்.

✦ ✦ ✦ ✦

உலகின் முதல் பணக்காரரான வாரன் பப்பெட்டைவிட 88 மடங்கு அதிக சம்பளம் பெறுகிறார், சென்னையைச் சேர்ந்த இந்திரா நூயி என்ற பெண்மணி. பெப்சி நிறுவனத் தலைவரான இவரின் கடந்த ஆண்டு வருமானம் ரூ.58.8 கோடி. இதில் சம்பளமாகப் பெற்றது ரூ.19.6 கோடியாகும். மற்றவை நிறுவனப் பங்குகளாகப் பெற்றவை. வாரன் பப்பெட்டின் சம்பள் ரூ.70 இலட்சம் மட்டுமே!

✦ ✦ ✦ ✦

துணை வேந்தராகப் பதவியேற்ற முதல் பெண் மணி வின்ஸாமேத்தா. பரோடா பல்கலைக் கழகத்தில் பதவியேற்றார்.

✦ ✦ ✦ ✦

இந்தியாவின் முதல் பெண் பேருந்து ஓட்டுநர், தமிழ்நாட்டைச் சேர்ந்த வசந்தகுமாரி.

✦ ✦ ✦ ✦

காதாம்பினி கங்குலி, சந்திரமுகிபாக என்ற இரு பெண்களே இந்தியாவின் முதல் பெண் பட்டதாரிப் பெண்கள்.

1883-ஆம் ஆண்டு கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டத்தைப் பெற்றனர். இதில் காதாம்பினி எம்.ஏ. (ஆங்கிலம்) பட்டம் பெற்ற முதல் பெண் என்ற சிறப்பை 1884இல் பெற்றார். அப்போது முதுகலைப் படிப்பு ஓராண்டுதான் போலும்.

✦ ✦ ✦ ✦

அமெரிக்காவின் முதல் பெண் புத்தகப் பதிப்பாளர், மேரி காத்தரின் கோடார்ட் (1775)

✦ ✦ ✦ ✦

அம்பு எய்தல் உலகக் கோப்பையில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமை டோலாபானர்ஜிக்கே உண்டு. இவர் துபாயில் நடந்த அம்பு எய்தல் உலகக் கோப்பைப் போட்டியின் மகளிர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். டோலா 110-109 என்ற புள்ளிக்

கணக்கில் கொரியாவின் பூன்யாங்சா என்ற பெண்ணை வீழ்த்தி தங்கத்தை கைப்பற்றினார்.

✦ ✦ ✦ ✦

ஒரே ஒலிம்பிக்கில் தடகள விளையாட்டுக்களில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்ற முதல் அமெரிக்கப் பெண்மணி என்ற சிறப்பை 1960ஆம் ஆண்டு தம் நாட்டிற்கு வாங்கித் தந்த 20 வயது வில்மா ருடால்ஃப் என்ற பெண்ணை நமக்குத் தெரியும்.

உடலையும், உள்ளத்தையும் பலப்படுத்தும் சக்தி சுய மதிப்பிற்கு உண்டு என்று நிரூபித்தார் இவர்.

11-வயது வரை போலியோ நோயால் நடக்க முடியாதவர். பெற்றோருக்கு வில்மா 20ஆவது குழந்தை. எப்போதும் காய்ச்சல் உள்ளவர். இப்படிப்பட்டவர் பள்ளியில் கூடைப்பந்து வீராங்கனையாகவும், ஓட்ட வீராங்கனையாகவும் உருவானார்.

இது எப்படி நடந்தது? உங்களை நீங்களே மதியுங்கள் என்ற தாரக மந்திரம் ஊட்டிய சக்திதான்.

✦ ✦ ✦ ✦

பெண்டிரைக் காப்பதில் நலமென்று ஞாலத்துக் கண்டு மொழிந்தனர் கற்றறிந்தோரே

- வளையாபதி

✦ ✦ ✦ ✦

மங்கையில்லா மனை பாழ்.

- ஔவையார்

✦ ✦ ✦ ✦

கண்ணுக்குப் புலனாகாத அமைதி, பெண் வடிவாகிக் கண்ணுக்குக் காட்சியளிக்கின்றது.

- நச்சினார்க்கினியர்

✦ ✦ ✦ ✦

ஒரு பெண்ணுக்கு நான்கு கடமைகள் இருக்கின்றன. மகளாக இருப்பது, சகோதரியாக இருப்பது, மனைவியாக இருப்பது தாயாக இருப்பது.

- ஸ்டீல்

✦ ✦ ✦ ✦

பெண்களறிவை வளர்த்தால், வையம் பேதமை ஆற்றிடும் காணீர்.

- பாரதியார்

✦ ✦ ✦ ✦



நூலாசிரியர் பாபநாசம் குறள்பித்தன் 19.07.1946–ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்.
இவரது பெற்றோர் தனம்–வெங்கடாசலம்.
தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் புலவ பட்டம் பெற்றவர்.
1965 முதல் சுதேசமித்திரனில் எழுதத் தொடங்கி இன்று வரை எழுதி வருகிறார்.

புரட்சித் தலைவர் எம். ஜி.ஆர். அவர்கள் நடத்தி வந்த 'தாய்' வார இதழில் துணையாசிரியராக பத்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். சிறுவர், ஆன்மிகம், நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், பல்து என்று பாராட்டுக்குரிய பற்பல நூல்கள் எழுதியுள்ளார்.

வி.ஜி.பி. விருது [1984], மனித நேய அறக்கட்டளை விருது [2001], திருப்பூர் தமிழ்ச்சங்க விருது [2002], தமிழக அரசு விருது [2002], காஞ்சி தமிழ்வளர்ச்சி சங்க விருது [2008], மதுராந்தகம் மகாகவி பாரதி நற்பணி மன்றவிருது [2008], ஸ்ரீ வைணவ மகாசங்க விருது [2008] என பல்வேறு அமைப்புகளின் விருதுகளையும் தன் எழுத்துப் பணிக்காக வென்று குவித்தவர்.

'இரவும் பகலும் தாய்த் தமிழுக்குப் பணியாற்றுவதே என் பிறவிப் பெரும் பயன்' என்ற நோக்கில் எழுதிக் கொண்டே இருக்கும் இவருடைய நூல்களின் எண்ணிக்கை எழுபத்தைந்தைத் தாண்டி நடைபோடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.